JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 08 | அக்டோபர் 2023 | ஆண்டு சந்தா ₹ 100

யுத்தகளம் இறங்கிய நீ! தரித்து நிற்கவும் கூடாது! தாமதிக்கவும் கூடாது!

## துணிந்து ஓடு!



# வாலிபர் உலகம்

## உள்ளே...


4


10


22


30



இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.

**30,000 வாலிபர்கள்**
**கையில் தவழும் வாலிபர் உலகம்**
**பத்திரிக்கை உங்கள் கையில் உள்ளதா?**






அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். **Youth.jesusredeems.com** என்ற **website** மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **மேலும் தொடர்புக்கு 9750955547**

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* **மோகன் சி. லாசரஸ்** *இணை ஆசிரியர்:* **அவினாஷ்**

*ஆசிரியர் குழு:* **வயலா | ஜெயசீலன் | ரவி | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்**

*வடிவமைப்பு:* **டேவிட்சன்.**

தலைவாசல்



# துணிவு !!

அன்பான இளநெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

**Hungary** நாட்டில் ராணுவத்தில் **sargent**ஆக பணிபுரிந்தவர் **Karoly Takacs**. மிகவும் திறமையாக துப்பாக்கி சுடும் திறன் கொண்டவர். துப்பாக்கி சுடும் போட்டியில் கலந்து கொண்டு சாதிக்க நினைத்தவர். ஆனால் அந்த **Hungary** அரசாங்கம் **Army Sargent** பதவியில் இருக்கிறவர்கள் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள தடை விதித்து இருந்தது. அதனால் 1936ல் ஒலிம்பிக்கில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. அதனால் மனம் சோர்ந்து போனார். சில நாட்களிலேயே அரசாங்கத்தால் அந்த தடை நீக்கப்பட்டது. எனவே எப்படியாவது ஒலிம்பிக்கில் கலந்துகொண்டு வெற்றிபெற கடுமையான பயிற்சி எடுத்தார்.



பின்னர் எதிர்பாராதவிதமாக 1938ல் அவருடைய வலது கை விரல்கள் வெடிகுண்டு வெடித்ததால் சேதம் அடைந்து, வாழ்க்கையில் மிகவும் **Karoly Takacs** உடைந்து போனார். பின்னர் கடும் முயற்சி செய்து துணிந்து செயல்பட்டு, தனது இடது கையால் துப்பாக்கிச் சுட ஆரம்பித்தார். 1940ல் ஒலிம்பிக்கில் எப்படியாவது கலந்து கொண்டு வெற்றி பெற்று **Gold Medal** வாங்க வேண்டும் என்ற கனவோடு இருந்தார். ஆனால் இரண்டாவது உலக போர் காரணமாக 1940 மற்றும் 1944 ஒலிம்பிக் ரத்து செய்யப்பட்டது. வாழ்க்கையில் மறுபடியும் உடைந்து போனார். 1948ல் நடைபெற்ற ஒலிம்பிக்கில், உங்களைவிட திறமை வாய்ந்தவர்களோடும் சிறந்த போட்டியாளர்களோடும் போட்டியிட்டு எப்படி வெற்றி பெற போகிறீர்கள் என்று எல்லோரும் கேட்க, தன் வெற்றி பயணத்தில் துணிந்து ஏறினார் கரோலி. முடிவில் தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனைப் படைத்தார்.

இன்றைய சூழலில் தடை என்பது இன்றியமையாததாக மாறிவிட்டது.

- அத்தனைத் தடைகளைத் தாண்டி, துணிந்து ஓடினால் தான் சாதனை படைக்க முடியும்.
- தரித்து நின்றாலும், தயங்கி நின்றாலும் வெற்றியைச் சுதந்தரிக்க முடியாது.
- துணிந்து ஓடும் அத்தனை பேரும் கரோலி போல் வெற்றிபெற முடியும்.

**வாலிபனே எழுப்புதல் ஓட்டத்தில் நீ தரித்து நிற்கவும் கூடாது: தாமதிக்கவும் கூடாது.**

காரணம் எதிரி நம்மை விட வேகமாக எழுப்புதலுக்கு விரோதமாக தேசத்தில் பல தீவினையானக் காரியங்களை செய்துக் கொண்டிருக்கிறான்.

எனவே,

அபிஷேகத்தைப் பெற்ற நீ,

அழைப்பைப் பெற்ற நீ,

தேசத்தை சுதந்தரிக்க **துணிந்து ஓடு;**

தொடர்ந்து ஓடு; உன்னை தடுக்க ஒருவரும் இல்லை!!



கிறிஸ்துவின் பணியில்

**அவினாஷ்**

# தற்கொலைக்கு முயன்ற எஜாஸை தேடி வந்த இயேசு!



சாட்சி தொகுப்பு: ஜாய்லின் ஜாண்

**இஸ்லாமிய மார்க்கத்தில் பிறந்து வளர்க்கப்பட்டு, அதில் மிகுந்த பக்தி வைராக்கியம் கொண்டு, தன்னுடைய தெய்வத்தை சந்திக்க வேண்டும் என்ற முயற்சியில் தோல்வியுற்று, தற்கொலைக்கு நேராக ஓடிய சகோதரரை மெய் தெய்வமாகிய இயேசு தொட்டு, இரட்சித்து அவருக்கு சாட்சியாக நிறுத்தியிருப்பதைப் பற்றி அவரிடமே கேட்போம் வாருங்கள்.**

**உங்களுடைய சிறுவயது மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**

என்னுடைய பெயர் முகம்மது எஜாஸ். நான் திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் பிறந்து வளர்ந்தேன். நான் ஒரு ஐதீகமான



(orthodox) இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்தேன். எனது 5வது வயதில் அப்பா இறந்தார்கள். அதன் பிறகு, எனது தாத்தா மிகவும் பணக்கார குடும்பம் என்பதால் அவர்களோடு வாழ்ந்து வந்தோம். நான் 12 வயதிலேயே அரபி எழுத, வாசிக்கக் கற்றுக் கொண்டேன். குரான் 7, 8 முறை வாசித்து முடித்தேன்.

சிறுவயதிலேயே எனது மதத்தைக் குறித்து பக்தி வைராக்கியமாக இருப்பேன். குரான் என்ன சொல்லுகிறதோ அதையே பின்பற்றுவேன். தினமும் 5 வேளை பள்ளி வாசலில் தொழுகைக்கு செல்வேன். காலையில் 3:30 மணிக்கெல்லாம் எழுந்து நான் தொழுது முடித்து விட்டு, ''ஏன் இன்றைக்கு தொழுகைக்கு வரவில்லை'' என்று ஒவ்வொரு வீடாக சென்று கதவை தட்டிக் கேட்பேன். இப்படி என் தெய்வத்தின் மீது அதிக பக்தியுடன் இருந்தேன்.

**சிறுவயதில் கிறிஸ்தவத்தைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

அல்லாவைத் தவிர வேறு யாருமே இல்லை, வேறு எல்லா தெய்வமும் முட்டாள் என்று சொல்வேன். கிறிஸ்தவர்களைப் பார்த்தாலே எனக்கு பிடிக்காது. கிறிஸ்தவத்தில் பரிசுத்தம் என்று சொல்வது போல இஸ்லாமில் ஈமான் முறையை நாங்கள் பின்பற்றுவோம். (ஈமான் என்றால் – தலையில் தொப்பி



வைப்பது, தாடி வளர்ப்பது, மதுபானம் பயன்படுத்த மாட்டோம், கால் கரண்டை வரை பேண்ட் போடுவது) இதையெல்லாம் நான் சிறுவயதிலிருந்தே பின்பற்றுவேன். இயேசுவைக் குறித்து எதுவுமே தெரியாது, ஆனாலும் பள்ளிப்

படிக்கும்போதே கிறிஸ்தவர்களிடம் வாக்குவாதம் செய்வது, இயேசுவைக் கொச்சையாக பேசுவது போன்ற காரியங்களைச் செய்து வந்தேன்.

**சரி... உங்கள் தெய்வத்தின்மீது அளவுக் கடந்த அன்பு வைத்திருந்தீர்கள்... உங்கள் தெய்வம் நீங்கள் கேட்ட எல்லாவற்றையும் கொடுத்ததா?**

2004ஆம் ஆண்டு எனது தாத்தா இறந்தார். அதன் பிறகு எங்கள் குடும்பத்தில் சில பிரச்சனைகளினால் நாங்கள் தென்காசியிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தோம். அதன் பிறகு எங்கள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட ஆரம்பித்தது. எனக்குள், அப்பா இல்லை என்கிற தாழ்வு மனப்பான்மை வர ஆரம்பித்தது. அப்போது ஒருநாள், என் மனதில் எப்படியாவது அல்லாவை சந்தித்து ஆக வேண்டும் அல்லது அல்லாவிடமே நான் சென்று விட வேண்டுமென்று முடிவுபண்ணி, ஒரு நாளைக்கு 5 முறை தொழுகிற நான் 30 முறை தொழ ஆரம்பித்தேன். காலையில் எழுந்ததிலிருந்து இரவு தூங்கும் வரை எப்பொழுதும் தொழுகையில் தான் இருப்பேன். என் உறவினர் 'ஏன் நீ பித்து பிடித்தவன் போல் நடந்து கொள்கிறாய்' என்று கேட்பார்கள். எனக்கு அல்லா மேல் அவ்வளவு விருப்பம்.

**சரி... அல்லாவை அவ்வளவாய் நேசித்து 30 முறை தொழுதீர்கள்... அல்லா உங்களை சந்தித்தாரா? உங்கள் பிரச்சனை முடிந்ததா?**

சொல்கிறேன், 3 நாட்கள் இப்படி 30 வேளை தொழுத பின்பும் ஒன்றும் நடக்கவில்லை என்பதால்



எனக்குள் ஒரு வெறுமை வர ஆரம்பித்தது. இதனால், நாம் நேரடியாக அல்லாவிடமே சென்று விடலாம் என்று சொல்லி, 2005ஆம் ஆண்டு ஜனவரி 2ம் தேதி தற்கொலை செய்ய முடிவு செய்து, திருநெல்வேலிக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்தேன். அப்பா இல்லாதினால் என்னை கவனிக்க யாருமே இல்லையே, என் வாழ்க்கை முடியப் போகிறதே என்று கிட்டத்தட்ட 4 முதல் 5 மணி நேரம் ஏங்கி ஏங்கி அழுதேன். திடீரென்று அந்த மரத்தைத் திரும்பி பார்த்த போது, அதில் ''உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்'' என்று ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. அந்த வார்த்தையைப் பார்த்து விட்டு திரும்பவும் அழுது கொண்டிருந்தேன். அந்த வார்த்தையை நான் ஒருமுறை தான் பார்த்தேன், அந்த வார்த்தை என்னோடு பேச ஆரம்பித்தது. ''என் மகனே, நீ வீட்டிற்கு போ'' என்று மறுபடியும் மறுபடியும் ஒரு சத்தம் என்னோடு பேச ஆரம்பித்தது. சரி என்று வீட்டிற்கு வந்து நன்றாக தூங்கினேன்.



**சரி, அந்த சத்தத்தைக் கேட்டு தற்கொலை எண்ணத்தை கைவிட்டு வீட்டிற்கு சென்று நன்றாக தூங்கினீர்கள்... அந்த சத்தம் யாருடையது என்று தெரிந்து கொண்டீர்களா?**

ஆம்! யாரும் இல்லாத அறையில் நான் மட்டும் தூங்கிக் கொண்டிருக்கும் போது, ஒரு மிகப்பெரிய ஒளி என் அறையை நிரப்பியது. நான் கண்களைத் திறந்து பார்த்த பொழுது, என் அருகில் ஒருவர் நிற்பதைப் பார்த்தேன். இவர் தான் 'இயேசு' என்று உள்ளத்தில் ஒரு சத்தம் தொனித்துக் கொண்டே இருந்தது. அந்த அறையில் இயேசு என்னருகில் நிற்பதைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். இயேசுவைப் பார்த்தவுடனேயே என்னையுமறியாமல் பாவத்தை அறிக்கையிட ஆரம்பித்தேன். எங்களுக்கு பாவத்தை அறிக்கையிடும் பழக்கம் எதுவும் கிடையாது. பாவ அறிக்கை என்றால் என்னவென்றே தெரியாத நான் 1:30 மணி நேரம் நான் அதுவரை செய்த, யாருக்கும் தெரியாத, என் மனதின் இருட்டறைக்குள் இருந்த பாவங்களை முற்றிலுமாக அறிக்கை செய்து விட்டு தூங்கினேன். 'நான் ஏன் இயேசுவை பார்க்க வேண்டும்? நான் அல்லாவையோ, முகம்மது நபியையோ தானே பார்க்க வேண்டும் என்று விரும்பினேன்' என்று எனக்குள் பெரிய கேள்வி எழுந்தது. இந்த எண்ணம் மனதிற்குள் ஓடிக் கொண்டே இருந்தது. அப்போது நான் வீட்டில் டி.வி பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு ஊழியக்காரர் ''இறைவன் அன்பானவர்'' என்ற தலைப்பில் பேசிக் கொண்டிருந்தார்.

**'இயேசு ஏன் என்னை சந்திக்க வேண்டும்' என்ற உங்களின் கேள்விக்கு விடை கிடைத்ததா?**

என் வாழ்க்கையிலேயே இறைவன் அன்பானவர் என்று அப்பொழுது தான் கேள்விப்பட்டேன். இயேசு அன்பானவர் என்று கேட்டதும் நான் அவரை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. ஆனால் நான் இயேசுவை அவமதித்தவன், இயேசுவை கேவலமாக திட்டினவன், அவர் என்னை நேசிப்பாரா என்று யோசிக்க ஆரம்பித்தேன். அன்று இரவு இயேசுவை மறுபடியும் முகமுகமாய்ப் பார்த்தேன். அவர் என்னோடு அன்பாக பேசினார். எனக்கு அப்பா இல்லாததினால் அப்பா-மகன் உறவு எப்படி இருக்கும் என்று தெரியாது. அதை இயேசு எனக்கு கொடுத்து, தகப்பன்-மகன் உறவு வளர ஆரம்பித்தது. இதை எப்படி அம்மாவிற்கு புரிய வைப்பது என்று தெரியாமல் இருக்கும் போது, பாளையங்கோட்டையில் ஒரு கிறிஸ்தவ கூட்டம் நடைபெறுவதாக கேள்விப்பட்டு, 'அங்கு என்ன நடக்கிறது என்று பார்த்து வருகிறேன்' என்று சொன்னேன். எனது அம்மா அங்கெல்லாம் போகக் கூடாது என்று சொன்னார்கள். மிகவும் அடம்பிடித்து கேட்டதால், நானும் உன்னோடு வருகிறேன் என்று சொல்லி, நானும் எனது அம்மாவும் யாருக்கும் தெரியாமல் அந்த மண்டபத்தின் கடைசியில் போய் உட்கார்ந்தோம். உட்கார்ந்த உடனே, அந்த ஊழியக்காரர், தேவன் ஒரு முஸ்லீம் குடும்பத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அந்த வாலிபனை தேவன் தெரிந்தெடுத்திருக்கிறார். ''வேறு தோட்டத்திலிருக்கும் செடியைப் பிடுங்கி எடுத்து,



அவருடைய தோட்டத்தில் நட்டு அது பெரிய தோட்டமாகி, தோப்பாகி தேவனுக்காக காய்த்து கனி கொடுக்கும்'' என்று சொன்னார். இப்படி எல்லாம் பேசுவதை நான் கேள்விப்பட்டதோ, பார்த்ததோ இல்லை. நான் தற்கொலை செய்ய போன போது என்னை காப்பாற்றின இயேசுவை தான் இவர் பிரசங்கிக்கிறார் என்று அப்பொழுது புரிந்தது. அவர் மெய்யாகவே உயிரோடிருக்கிறார் என்பதை புரிந்து கொண்டேன்.

**சூப்பர்... இயேசுவை அறிந்து கொண்டீர்கள்... இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டீர்களா?**

இயேசுவை அறிந்த பின்பு வேதத்தை வாங்கி வாசிக்க ஆரம்பித்தேன். நான் அன்று மரத்தில் கண்ட அந்த வசனம் யோவான் 16:20ல் இருந்தது. வேதத்தை எப்படி வாசிக்க வேண்டுமென்று எனக்கு அவரே வாசித்துக் கற்றுக் கொடுத்தார்.



இயேசுவை இன்னும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தேன். நான் வேதத்தை வாசிக்க வாசிக்க, எனது குணநலன்கள் (கர்வம், யாரையும் மதிக்காத தன்மை, கல்நெஞ்சம்) மாற ஆரம்பித்தன. இதைப் பார்த்தவுடன் எனது அம்மாவும் 2 வாரத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். எனது பாட்டி 4 வருடங்களுக்கு பிறகு இரட்சிக்கப்பட்டு, அவர்களது 79வது வயதில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தார்கள். என் தாத்தாவும், அக்காவும் 5வது வருடத்தில் இரட்சிக்கப்பட்டார்கள். இன்றைக்கு எங்கள் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட்டு சாட்சிகளாக வாழ்ந்து வருகிறோம்.

**இரட்சிக்கப்பட்ட பின்பு உங்கள் வாழ்க்கையில் வந்த பிரச்சனைகளை எப்படி மேற்கொண்டீர்கள்?**

நான் இரட்சிக்கப்பட்ட பிறகு முஸ்லீம் கல்லூரியில் Software Engineering படிக்க எனக்கு இடம் கிடைத்து படிக்க ஆரம்பித்தேன். அங்கு பள்ளி வாசலுக்கு போவதை தவிர்த்து வந்தேன். இதைப் பார்த்த Professor ஒரு நாள் என்னிடம் 'எஜாஸ் ஏன் தொழுகைக்கு வருவதில்லை, ஏதாவது ஆலயத்துக்கு போகிறாயா? அல்லது ஏதாவது கிறிஸ்தவ பெண்ணை காதலிக்கிறாயா' என்று கேட்டார். அதற்கு நான், 'தினமும் பள்ளி வாசலுக்கு வருகிறேன், நீங்கள் பார்க்கவில்லையா?' என்று கேட்டேன். இதை சொல்லி முடித்தவுடன், ஆவியானவர் ''நீ எனக்கு சாட்சியாக நிற்கமாட்டாயா? நீ கேட்ட எல்லாவற்றையும் நான் கொடுத்தேனே'' என்று கேட்டார். எனது இருதயம் உடைந்து விட்டது. உடனே Professorஐ கூப்பிட்டு, I am sorry, நான் முஸ்லீம்



கிடையாது, நான் ஒரு கிறிஸ்தவன், நான் இப்பொழுது தொழுகைக்கு போவதில்லை, ஆலயத்துக்கு தான் போகிறேன் என்று சொன்னேன். ஒருமணி நேரம் எனக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் நடந்தது. கடைசியாக நீ இந்த கல்லூரியில் படித்தால், எல்லோரையும் கெடுத்து விடுவாய், எனவே நீ இந்த கல்லூரியில் படிக்கக் கூடாது, வேறு கல்லூரியில் உன்னை சேர்த்து விடுகிறோம் என்று சொன்னார்கள்.

பிறகு கொஞ்ச நேரம் யோசித்து விட்டு, நீ யாரிடமும் கிறிஸ்தவன் என்று சொல்லமாட்டாய் என்றால், தொடர்ந்து இக்கல்லூரியில் படிக்கலாம் என்று சொன்னார்கள். நானும் சொல்ல மாட்டேன் என்று சொன்னேன். எப்பொழுது சொல்லமாட்டேன் என்று சொன்னேனோ, அன்றிலிருந்து எல்லாரிடமும், ‘‘நான் இயேசுவைப் பார்த்தேன், இயேசு உயிரோடு இருக்கிறார்’’ என்று சொல்ல ஆரம்பித்தேன். இயேசுவைப் பற்றி எனக்கு ரொம்ப சொல்லத் தெரியாது. ஆனால் ஆவியானவர் ஞானம் கொடுத்து என்னை பேச



வைத்தார். நான் இயேசுவை ஏற்றுக் கொண்டதினால், நிறைய பிரச்சனைகளை சந்தித்தேன். நிறைய பேர் என்னை அடிக்க வேண்டும், என்னை மாற்ற வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். ஆனால் இயேசு யார் கையிலும் என்னை ஒப்புக் கொடுக்கவில்லை.

**கேட்கும் போது சந்தோஷமாக இருக்கிறது.... சரி இப்போது நீங்கள் உங்களுக்கு மறுஜீவனைக் கொடுத்த இயேசுவுக்காக என்ன செய்கிறீர்கள்?**

நான் ஒரு தொழிலதிபர். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் Bussiness செய்து கொண்டே பகுதி நேரமாக ஊழியமும் செய்து வருகிறேன். சபைகள், கல்லூரிகள், வாலிபர் கூடுகைகள், கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் பல இடங்களில் எனது சாட்சியை கர்த்தர் நாம மகிமைக்கென பகிர்ந்து வருகிறேன். மேலும் இஸ்லாமியர்கள் மத்தியில் ஊழியம் செய்தும், அவர்களை ஜீவனுள்ள தேவனாகிய இயேசுவண்டை வழிநடத்த ஆர்வம் தெரிவிப்போருக்கு பயிற்சியும் அளித்து வருகிறேன். அதுமட்டுமின்றி Youtube வாயிலாகவும் இயேசுவை அறிவித்து வருகிறேன்.

**உங்களுடைய திருமண வாழ்க்கையைப் பற்றி சொல்லுங்களேன்?**

நான் 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் பிரசன்னாவை கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்துகொண்டேன். அவர்கள் இயேசுவை அறியாத குடும்பத்தில் இருந்து இரட்சிக்கப்பட்டவர்கள்.



எனக்கு 8 வயதில் ஐவா நடாசா என்ற மகளும், 4½ வயதில் காதோஷ் லராய் என்ற மகனும் இருக்கிறார்கள். எனது மனைவி என்னுடன் பிசினெஸிலும் ஊழியத்தில் உறுதுணையாக இருக்கிறார்கள்.

**அன்பான வாலிபர்களே! பரம்பரை கிறிஸ்தவர்கள் என்று பெருமிதம் கொள்ளும் அநேகர் இன்று இயேசுவை அறிவிக்க தைரியமும் வைராக்கியமும் இல்லாமல் இருக்க, இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்து, மெய் தெய்வமாகிய இயேசுவைக் கண்டு கொண்டு, இரட்சிக்கப்பட்ட சகோ. முகம்மது எஜாஸ் எவ்வித அச்சமுமின்றி துணிச்சலுடன் இயேசுவைப் பிரசங்கிப்பது நமக்கெல்லாம் உத்வேகம் அளிக்கிறதல்லவா? உனக்காகவும் எனக்காகவும் சிலுவையில் தன் ஜீவனை தியாகமாய் கொடுத்த இயேசுவை அறிவிக்க துணிவுடன் ஓட நீ ஆயத்தமா?**



# புதிய துவக்கத்தைத் துவங்குங்கள்...

Heart Beat

ஆலோசனை: அவி



நான் 10ம் வகுப்பு படிக்கும் போது எங்கள் ஊருக்கு அருகில் வசித்த, கிறிஸ்தவரல்லாத ஒருவரை விரும்ப ஆரம்பித்தேன். என்னுடைய Engineering படிப்பை முடித்து நான் வேலை செய்யும் வரை அந்த காதல் நீடித்தது. பின்னர் என் பெற்றோருக்கு விஷயம் தெரிந்து மிகவும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். என்னை மிகவும் அடித்து துன்புறுத்தினார்கள். அவர் என்னை மிகவும் நேசித்தார். கடைசி வரை பார்த்துக் கொள்வேன் என்று சொன்னார். அதனால் அவருக்காக எல்லாவற்றையும் சகித்தேன். ஆனால் சில மாதங்களுக்கு முன்பு அவரே என்னிடம் வந்து, நான் வேறு பெண்ணை திருமணம் செய்யுமாறு என்னுடைய பெற்றோர் வற்புறுத்துகிறார்கள் என்று சொல்லி, தன்னுடைய கல்யாண Cardஐ எனக்கு கொடுத்துவிட்டு சென்றார். என்னால் இந்த ஏமாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என் இருதயம் நொறுங்கி விட்டது. என்னால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. அதனால் என் வேலையை Resign செய்து விட்டேன். நான் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கிறேன். இந்த வேதனையிலிருந்து வெளியே வரும் முன்னால், என் வீட்டில் எனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தனர். என் காதல் விஷயம் தெரிந்து, வருகின்ற வரன்கள் அனைத்தும் தள்ளி தள்ளி போகின்றன. என்னால் என் பெற்றோருக்கு மிகுந்த அவமானமும் துக்கமும் ஏற்பட்டுவிட்டது. என் பாவத்திற்கு என்ன பரிகாரம் செய்வது என்று தெரியவில்லை. வாழவும் பிடிக்கவில்லை. எனக்கு உதவி செய்யுங்கள்! Please! - மலர் ஏஞ்சல், திருப்பூர்.

அன்பு சகோதரி மலர்! உங்கள் கடிதம் படிப்பதற்கு வேதனையும், கண்ணீருமாய் இருக்கிறது. ஒரு பக்கம் நேசித்தவர் செய்த நம்பிக்கை துரோகத்தால் ஒரு பெரிய ஏமாற்றம், மறுபக்கம் உங்களால் உங்கள் பெற்றோருக்கு பெரும் அவமானமும் துன்பமும் வந்துவிட்டது என்ற வருத்தம்.

மலர்! நாம் நேசித்த நபர் நம்மை விட்டு விலகுவது வேதனையான ஒன்று. மேலும் நம்பிக்கை துரோகம் செய்யும்போது மனவேதனையும் மனஉளைச்சலும் உண்டாகும்.

மலர்! நீங்கள் இந்த துக்கத்திலும், வேதனையிலும், ஆழ்ந்து, நொடிந்து, போய் உங்கள் வாழ்க்கையை ஸ்தம்பிக்க வைக்க முடியும். அல்லது இந்த வேதனை என்னும் உளையான சேற்றிலிருந்து வெளியே வந்து, உங்கள் வாழ்க்கையை மறுசீரமைப்பு செய்து, ஒரு புதிய துவக்கத்தை துவங்கவும் முடியும். நீங்கள் நினைத்தால் மறுபடியும் எழும்ப முடியும்.

ஒரு தவறான தீர்மானம் உங்கள் வாழ்க்கை என்னும் கப்பலை கரை தட்டச் செய்து விட்டது. கப்பல் கரை தட்டி விட்டது என்பதற்காக பயணமே செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

மலர், நீங்கள் செய்யும் சில சரியான தீர்மானங்களும், திட்டங்களும் உங்கள் புதிய பயணத்தை துவக்க உதவியாய் இருக்கும். முதலில் நான் இந்த சூழலில் இருந்து எழும்ப வேண்டும் என்று மனதில் ஒரு தெளிவான தீர்மானம் எடுக்க வேண்டும்.




அந்த தீர்மானத்தை நிறைவேற்றவும், தொடர்ந்து அதில் நிலைத்து நிற்கவும் சில திட்டங்களை செய்ய முற்பட வேண்டும்.



இழப்பு என்ற வேதனையிலிருந்து வெளியே வர உங்கள் மனது மற்றொரு காரியத்தில் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் சும்மா இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் பழைய வேதனைகளை நினைக்கத் தோன்றும். எனவே நீங்கள் பார்த்த அதே வேலைக்கு விண்ணப்பித்து அதில் Join செய்து உங்களை busyயாக வைத்துக் கொள்ள வேண்டும்.



மேலும் பழைய நினைவுகளைத் தூண்டும் பொருட்கள் லெட்டர், இமெயில், SMS, Gifts, சில இடங்கள் போன்றவற்றை பார்க்கவோ, படிக்கவோ முயற்சிக்க வேண்டாம்.



பழையவற்றை மறப்பது கடினம். ஆனால் அந்த சிந்தனையை தவிர்க்க புதிய காரியத்தில் உங்கள் மனதை ஈடுபடுத்துவது நல்லது.



பொறுமையோடு காத்திருக்க முயலுங்கள். ஒரு வரனும் அமையவில்லை, Cancel ஆகிவிட்டது என்று மனம் தளர்ந்து, சோர்ந்து போக வேண்டாம்.




உங்களுடைய உறவை தேவனோடு மறுபடியும் புதுப்பிக்க முயலுங்கள். இயேசுவை விட்டு தூரம் போன நீங்கள், இப்பொழுது அவர் பக்கம் வரும்போது, அவர் உங்கள் தோல்வியை மாற்றி புதிய துவக்கத்தை கொடுக்க முடியும். அந்த துவக்கத்தில் வெற்றியாய் ஓட செய்யவும் முடியும்.



ஞாயிற்றுக்கிழமை மற்றும் week endல் உங்களால் முடிந்த ஊழியத்தை செய்யலாமே. Tract ministry, கிராம ஊழியம், children ministry போன்ற காரியங்களில் உங்களை ஈடுபடுத்தும் போது, உங்கள் மனதில் ஒரு புதிய சந்தோஷமும் இனம் புரியாத நம்பிக்கையும் உண்டாகும்.

**செப்பனியா 3;19ன் படி, எந்த இடத்தில் வெட்கப்பட்டு அவமானப்பட்டு நின்றீர்களோ, அதே இடத்தில் ஆண்டவர் உங்கள் தலையை உயர்த்தி, உங்கள் பெற்றோருக்கு உங்களை ஆசீர்வாதமாய் மாற்றுவார். உங்கள் புதிய துவக்கத்தை துவங்க நீங்கள் துணிந்து ஓடுங்கள்!!**



முகப்பு செய்தி: சதீஷ்

# துணிந்து ஓடு!

மும்பை மாநகரமே எதிர்பாராத வகையில் நவம்பர் 26, 2008 அன்று மாலை தீவிரவாத தாக்குதல் ஆரம்பமானது. மும்பை சத்ரபதி சிவாஜி ரயில் நிலையத்தில் ஏராளமான பொது மக்கள் காத்திருக்கையில், சற்றும் எதிர்பாராத வகையில் அவர்கள் மீது துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தன. கொஞ்சம் கூட இரக்கமின்றி கண்மூடித்தனமாக சுட்டதில் ஏறக்குறைய 58 பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதற்கடுத்த சில மணி நேரத்தில் மும்பை நாரிமன் இல்லம், லெபர்ட் கஃபோ பொது மருத்துவமனை என மும்பையில் பல இடங்களில் தீவிரவாதிகளின் தொடர்தாக்குதல் நடந்தது.

இதனைத் தொடர்ந்து மும்பையின் பிரபல தாஜ் ஓட்டலில் நடைபெற்ற தாக்குதலில் அங்கிருந்த அநேகர் கொல்லப்பட்டாலும் 300க்கும் மேற்பட்ட வெளிநாட்டினரை தீவிரவாதிகள் பிணைக்கைதிகளாக பிடித்து வைத்துக் கொண்டனர். 3 நாட்கள் நடந்த இந்தத் தீவிரவாத தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த தீவிரவாத தாக்குதலிலிருந்து ஜனங்களைக் காப்பாற்றவும், பிணைக்கைதிகளை விடுவிக்கவும், நம் காவல்துறை அதிகாரிகள், இராணுவ வீரர்கள், தேசிய பாதுகாப்பு காவலர்கள் என பலர் தங்களுடைய குடும்பம், பிள்ளைகள் மற்றும் ஜீவனையும் பொருட்படுத்தாமல் துணிந்து தீவிரவாதிகளை எதிர்த்து போராடி பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு எடுத்தனர். நம்முடைய அதிகாரிகள் துரிதமாகவும், துணிவுடனும் செயல்பட்டதால் அநேகருடைய வாழ்க்கை பாதுகாக்கப்பட்டது.



**“...பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்...” (யோவான் 8:34)** என்ற வேத வார்த்தைகளின்படி இன்றைய இந்தியாவில் பல வருடங்களாக, பெரும்பாலான வாலிபர்கள் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, மொபைல் போன், சமூக வலைத்தளங்கள் என பல உலக

சிற்றின்பத்தில் சிக்கி சிறைபட்டு போய் உள்ளனர். பாவ சிறையிருப்பில் சிக்கி தவிக்கும் இவர்களை விடுவிக்க எத்தனையோ அறைகூவல்கள் வந்தாலும், அதைக் கேட்டும் கேளாதவர்களைப் போல் இருக்கும் கிறிஸ்தவ வாலிபர்கள் இன்றைக்கு ஏராளம் உள்ளனர். இந்த உலகத்தில் ஒரு வினாடிக்கு 3 பேர் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த புத்தகத்தை நீங்கள் வாசிக்கத் தொடங்கிய நேரம் முதல், இந்த நேரம் வரை சுமார் 5 நிமிடங்கள் கடந்து விட்டன. இந்த 5 நிமிடத்தில் ஏறக்குறைய நிமிடத்திற்கு 180 பேர்கள் வீதம் 900 பேர் இயேசுவை அறியாமல் பாவத்துடன் மரித்து நரகத்துக்கு போய் கொண்டு தான் இருக்கிறார்கள். இப்படி பாவத்தில் சிக்கி சிறைப்பட்டு போகும் வாலிபர்களை துரிதமாக விடுவித்து, எதிர் வரும் சவால்களை துணிவுடன் சந்தித்து யார் செயல்படுவார்கள் என்று ஏக்கம் நிறைந்த வார்த்தைகளுடன்தான் ஆண்டவர், **"யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்..." (ஏசாயா 6:8)** என்று கேட்கிறார்.



இஸ்ரவேல் தேசத்தின் பட்டணமாகிய சமாரியாவிலே அந்நாட்களில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. அதே சமயத்தில் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு வந்து சமாரியாவை முற்றிகை போட்டான். ஜனங்கள் தங்கள் சொந்த பிள்ளைகளை சமைத்து சாப்பிடும் அளவிற்கு பஞ்சம் கொடுமையாக இருந்தது. ஒவ்வொருநாளும் ஜனங்கள் மடிந்து கொண்டு இருந்தார்கள். பஞ்சத்தின் கொடுமையில் இருந்த அந்தப் பட்டணத்தில், ''உணவு இன்றி தவித்த நான்கு குஷ்டரோகிகள் சமாரியாவில் உணவின்றி தவிப்பதைவிட சீரியா இராணுவத்திற்குள் போவோம், ஒருவேளை சீரியா இராணுவம் தயவு செய்தால் பிழைக்கலாம் இல்லாவிட்டால் சாகலாம்'' என்று துணிந்து பயப்படாமல் தங்கள் ஜீவனையும் பொருட்படுத்தாது, சீரியருடைய பாளையத்தின் முன்னணியில் வந்தார்கள். துணிந்து வந்த இவர்கள் கால்களின் சத்தத்தை ஆண்டவர் இரதங்களின் சத்தமாகவும், குதிரைகளின் இரைச்சல் சத்தமாகவும் மாற்றி சீரிய இராணுவத்தினரை ஓடப் பண்ணினார்.

குஷ்டரோகிகள் இராணுவ வீரர்கள் இல்லாததைக் கண்டு தங்களுக்கு வேண்டிய மட்டும் புசித்து விட்டு பொன், வெள்ளி வஸ்திரங்களை கொள்ளையடித்து, திருப்தியடைந்தவுடன் **"அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்..." (2 இராஜா. 7:9)** என்று சொல்லிக் கொண்டு தங்களுடைய சரீர வியாதியையும் பொருட்படுத்தாமல் தாங்கள் குஷ்டரோகியாக இருப்பதால் ஜனங்கள் தங்களை கல்லெறிவார்கள் என்பதை அறிந்து இருந்தும் இரவோடு இரவாக துணிந்து ஓடி பட்டணத்திற்கான நல்ல செய்தியை இராஜாவிற்கு அறிவித்தார்கள். இவ்விதமாய் ஆண்டவர் நான்கு குஷ்டரோகிகளைக் கொண்டு சமாரியாவில் பஞ்சத்தில் தவித்த ஜனங்களை விடுவித்துக் காப்பாற்றினர்.

எனக்கன்பான வாலிபர்களே! **"வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" (எபி. 10:37).**

தங்களுடைய பட்டணத்தின் ஜனங்கள் பஞ்சத்தில் மடிந்து கொண்டு இருந்த போது அவர்களுடைய மீட்பின் செய்தியை தெரிந்து கொண்ட குஷ்டரோகிகள் அமைதியாக இருக்கவில்லை, தங்களின் ஜீவனையும் பொருட்படுத்தாமல் துணிந்து ஓடி ஜனங்களுக்கு மீட்பின் செய்தியை அறிவித்தனர். உங்களைச் சுற்றிலும் ஏராளமான மக்கள் ஒவ்வொருநாளும் அழிந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களுக்கு மீட்பின் செய்தியை அறிவிக்க உங்கள் கால்கள் எதற்கும் பயப்படாமல் துணிந்து ஓடினால், அவர்களை மீட்டு எடுக்க ஆண்டவராகிய இயேசுவும் பரலோகத்தின் தூதர்களும் ஆயத்தமாய் உள்ளனர். ஒருவேளை நாம் மீட்பின் செய்தியை அறிவிக்காவிட்டால் குஷ்டரோகிகள் சொன்னது போல குற்றம் நம்மீது சுமரும் என்பதை அறிவோமாக.

# "போராட்டம்" இன்றி "வெற்றி" இல்லை!




சாதனை: சுமா

இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். இளமை பருவம் என்பது மகத்தான பருவம். இந்த இளமை பருவத்தில் நீங்கள் எதை நோக்கி ஓடுகின்றீர்களோ, அது தான் உங்கள் எதிர்காலமாக அமையும். இந்த இளமை பருவத்தில் எடுக்கின்ற ஒவ்வொரு தீர்மானமும் சரியான விதத்தில், சரியான முறையில், சரியான நேரத்தில் இருந்தால் நம்முடைய வாழ்க்கையும் அநேகருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். அப்படி எடுத்துக்காட்டாக விளங்கிய சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் பார்வைக்காக...

ஹரிமேனன் என்பவர் மும்பையில் மிகவும் நடுத்தர மற்றும் எளிய குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதில் இருந்தே இசை மற்றும் கிரிக்கெட் ஆகிய இரண்டு விஷயங்களில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். தன்னுடைய பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் மிக கவனமாக படித்து பல்வேறு கல்வி நிறுவனங்களில் அதிக பட்டங்களைப் பெற்றார். இந்திய பன்னாட்டு நிறுவனமான 'விப்ரோ' நிறுவனத்தில் வணிகத் தலைவராக தொழில்துறையில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

ஆரம்ப காலகட்டம் மிகவும் போராட்டமாக இருந்தது. இருந்தாலும் ஹரிமேனன் போராடி வணிக சந்தையில் வெற்றியுடன் நுழைந்தார். ஹரி தன்னுடைய நண்பர்கள் நான்கு பேரோடு இணைந்து **Fabmart** என்ற ஆன்லைன் விற்பனையில் காலடி எடுத்து வைத்தார். **Fabmart** என்பது **Amazon, Flipkart** செய்யும் அதே வேலையை செய்கிறது. காலடி எடுத்து வைத்த முதல் ஆண்டு எந்த ஒரு சிறிய வளர்ச்சியையும், இலாபத்தையும் தரவில்லை. மிகப் பெரிய பின்னடைவை சந்தித்தனர்.



பின்னடைவை சந்தித்த ஹரிமேனன் மற்றும் அவரது நண்பர்கள் சோர்ந்து போகாமல், இன்னும் உற்சாகம் கொண்டு, **Fabmall** என்ற இந்தியாவின் ஒருங்கிணைந்த **Online and Offline**-ல் சில்லறை விற்பனை செய்யும் நிறுவனத்தைத் தொடங்கினர். தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களில் 300 கடைகளுக்கு மளிகைக் கடையின் சில்லறை விற்பனையை விரிவுபடுத்தினர்.

பிறகு 2011ல் "**Bigbasket**" நிறுவனத்தைத் தொடங்கினர். **Bigbasket** என்ற **Online Shopping**ல் 1000க்கும் மேற்பட்ட **Brands** மற்றும் 20,000க்கும் அதிகமான தயாரிப்புகளை காணலாம். **Bigbasket**, காய்கறிகள் முதல் அனைத்து வித பொருட்களையும் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றது. **Bigbasket** தொடங்கப்பட்ட முதல் 6 மாதங்கள் மிகவும் கடினமானவையாக இருந்தன. ஆனாலும் ஹரிமேனன் தொடர்ந்து வந்த சவால்களை எதிர்கொண்டார். முந்தைய நிறுவனங்களில் அநேக இழப்புகளை எதிர்கொண்டதால் சுலபமாக இதில் வெற்றி கண்டார். இன்று **Bigbasket**ன் மதிப்பு கோடிகளில் உயர்ந்துள்ளது. **Bigbasket** பற்றி தெரியாதவர்கள் எவரும் இல்லை. பல சாதனைகளைப் படைத்துள்ளார் ஹரிமேனன்.




**இதை வாசிக்கும் நண்பர்களே! வெற்றி பெறுவது மிக சுலபம். ஆனால் வெற்றிக்காக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிக மிக முக்கியம். தோல்விகள் வந்தால் சந்தோஷப்பட கற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அந்த தோல்வியே வெற்றிப் பாதைக்கு நேராக உங்களை நடத்தும். வெற்றியைப் பார்த்து இரசிப்பதோடு நின்று விடாமல் அதற்கு மேலே ஒரு படி சென்று அதை உங்களுடையதாக்கி கொள்ளுங்கள்!**

# துணிந்து நில்!

சிறப்புக் கட்டுரை: ரவி




கிறிஸ்தவ ஜீவியத்தில் மிகவும் முக்கியமான ஒரு பண்பு துணிவு. துணிவில்லாமல் இவ்வுலகில் நாம் தேவனுக்கு பிரியமான சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வது மிகக் கடினம். இயேசுதாமே வேதத்தில், **"...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33).** ஆம் நண்பர்களே, இவ்வுலகம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியவில்லை. ஆகவே, தேவனை அறிந்த நாம் இவ்வுலகில் வாழும் நாட்களில் அநேக சவால்களை அனுதினமும் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் உருவாவது இயல்பு. அத்தகைய சூழ்நிலைகளை தேவ ஆவியானவர் அருளும் துணிவில்லாமல் மேற்கொள்வது மிக அரிது.

வேதத்தில் தேவன் அருளும் துணிவைக் கொண்டு தாங்கள் எதிர்கொண்ட சவால்களை மேற்கொண்ட ஒருசில பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் நடந்தேறிய சில சம்பவங்களை காண்போம். தாவீது ஆடுகள் மேய்க்கும் சாதாரண ஓர் வாலிபனாய் இருந்த காலத்தில், இஸ்ரவேலுக்கு விரோதமாக பெலிஸ்தரின் இராணுவம் வந்தது. அவர்களில் ஒருவனாகிய கோலியாத் என்னும் ஓர் வீரன் இஸ்ரவேலை அனுதினமும் நிந்தித்துக் கொண்டு வந்தான். இஸ்ரவேல் இராணுவம் முழுவதும் அவனையும் அவன் வார்த்தைகளையும் கேட்டு பயந்து நின்றார்கள். அந்நேரத்தில், போர் வீரர்களாக இருந்த தன் சகோதரர்களுக்கு உணவு கொண்டு சென்ற தாவீதின் காதில் கோலியாத்தின் வார்த்தைகள் விழவே; தேவனுடைய துணிவினால் நிறைந்த தாவீது, **"...ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான்" (I சாமு. 17:26).** அப்பொழுது கோலியாத் தாவீதுக்கு எதிர்கொண்டு வந்த போது, ஒரு கல்லை எடுத்து கவணிலே வைத்து சுழற்றி கோலியாத்தின் நெற்றியிலே எறிந்தான். அந்த பெலிஸ்தன் முகங்குப்புற விழுந்து செத்தான்.

பாருங்கள் நண்பர்களே, தாவீது விசுவாசமும், துணிவும் நிறைந்த வார்த்தைகளை மொழிந்தான். மாறாக, ஆயுதப் பயிற்சியும், போர்ப் பயிற்சியும் பெற்ற இஸ்ரவேல் இராணுவமோ; ஓர் ஒற்றை வீரனைக் கண்டு பயந்து நின்றார்கள். காரணம் என்ன? தாவீதுக்கு தன் தேவன் யார் என்கிற சரியான புரிதல் இருந்தது. அனுதினமும் அவன் தேவனை தேடினபடியினாலே அந்த புரிதல் அவனுக்கு உண்டானது.



பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன்னுடைய ஓர் பொற்சிலையை தன்னுடைய குடிகள் யாவும் தலைவணங்கி தொழ வேண்டும். அப்படி தொழாவிட்டால் அவர்களுக்கு மரணம் நேரிடும் என்ற ஆணையை விதித்தப் போதும், யூத வாலிபர்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் துணிந்து அரசனைப் பார்த்து, 'நாங்கள் ஆராதிக்கும் எங்கள் தேவன் எங்களை உன் கையிலிருந்து விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை' என்றார்கள். அவர்களுடைய துணிவின் விளைவு என்ன? தேவன் அவர்களை பாதுகாத்த விதம் கண்டு நேபுகாத்நேச்சார் ராஜாவே, 'இஸ்ரவேலின் தேவனே, உண்மையான தேவன்' என்று அங்கீகரிக்க நேர்ந்தது (தானி. 3).

இதுபோல, புதிய ஏற்பாட்டிலும், இயேசுவின் சீஷர்களும், அப்போஸ்தலர்களும் எதிர்ப்பின் மத்தியிலும், பரிசுத்த ஆவியின் துணிவோடு தேவனுக்கு சாட்சியாக வாழ்ந்தார்கள் என்று வேதம் சான்றளிக்கிறது. ஆம் நண்பர்களே, சவாலான நேரங்களில் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை மறந்து வாழ்வது விசுவாச ஜீவியமல்ல. தேவனோடுள்ள ஆழமான விசுவாச உறவே துணிவை நமக்குள் பிறப்பிக்கும்.

**"...பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்" (யோசுவா 1:9).**



செய்தி: மோகன் சி. லாசரஸ்

# விசுவாசித்தால் ஆசீர்வாதம்!

**"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்" (மாற்கு 9:23).**

பிசாசினால் பாதிக்கப்பட்டு, மரணக்கட்டுகளோடு இருக்கிற என் மகனுக்கு ஒரு விடுதலை கிடைத்துவிடாதா? இந்த மரணக்கட்டு மாறி விடாதா? என்ற எண்ணத்தோடு ஒரு தகப்பன் இயேசுவினிடத்தில் வருகிறார். சிறுவயது முதல் இந்த பாதிப்பு இருந்ததினால் தன் மகனுடைய சுகத்திற்காக பல வைத்தியர்களிடம் சென்றிருக்கலாம்! பிசாசு துரத்துகிறவர்களிடம் அழைத்துச் சென்றிருக்கலாம்! எப்படியாவது என் மகனுக்கு விடுதலை கிடைத்து விடாதா என்று பல முயற்சிகளை அந்த தகப்பன் எடுத்திருப்பார். அதிகமான பணத்தை செலவு செய்திருப்பார், ஆனால் விடுதலை கிடைக்கவில்லை. ஏமாற்றம், தோல்வி, போன இடத்திலெல்லாம் மகனுக்கு விடுதலை கிடைக்காத ஒரு பரிதாபமான நிலமை. அந்த சூழ்நிலையில் தான் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு மகனை அழைத்து வருகிறார். இங்கு வந்தால் சீஷர்களைத் தான் பார்க்க முடிந்தது, சீஷர்களால் அந்த ஆவியை துரத்த முடியவில்லை. அப்பொழுது அந்த தகப்பன் உடனே, **"இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம்**



**தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று, நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்"** (மாற்கு **9:22)** என்று இயேசுவினிடத்தில் வந்து விண்ணப்பம் செய்கிறான்.

**"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" (மாற்கு 9:23)** என்று அற்புதமான வார்த்தையைச் சொல்கிறார். இன்றைக்கு ஒரு நன்மை நடக்காதா என்று ஏக்கத்தோடு ஆசீர்வாதத்தை எதிர்பார்த்திருக்கிற உங்களைப் பார்த்து, ''என் மகனே(ளே) நீ விசுவாசிக்கக்கூடுமானால் என்னால் அற்புதம் செய்ய முடியும், உனக்கு சுகம் கொடுக்க முடியும், நான் உன்னை ஆசீர்வதிக்க முடியும், எந்த இக்கட்டுகளில் இருந்தும் என்னால் விடுதலை கொடுக்க முடியும். ஆனால் நீ விசுவாசிக்க வேண்டும். நீ விசுவாசித்தால் தான் உன்னால் இந்த அற்புதத்தைக் காண முடியும்'' என்பதாக இயேசு உங்களுக்கு சொல்கிறார்.

மனிதர்கள் மேல் விசுவாசம் வைக்காமல், ''இயேசுதான் என்னை ஆசீர்வதிக்க முடியும்'' என்று அவர்மேல் நீங்கள் விசுவாசம் வைத்தால், உங்களுக்கு அற்புதம் செய்வதாக ஆண்டவர்

வாக்குக்கொடுக்கிறார். நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். இல்லை, இது தீர்க்கமுடியாத பிரச்சனை என்று சொல்கிறார்கள், இனி காப்பாற்ற முடியாது என்று சொல்கிறார்கள் என்று கலங்கி நிற்கிறீர்களா? மனிதர்கள் முடியாது என்று சொல்கிற காரியத்தை, இயேசுவால் செய்ய முடியும். இனிமேல் உங்களுக்கு குழந்தை பெற வாய்ப்பே இல்லை என்று மருத்துவம் சொல்லும். ஆனால் ''நான் உன்னை ஆசீர்வதிக்க முடியும், உன்னால் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்'' என்று ஆண்டவர் சொல்கிறார்.

**சரி, இந்த அற்புதத்தை எப்படி பெற்றுக் கொள்வது?**

விசுவாசத்தினால் தான் பெற்றுக் கொள்ள முடியும். விசுவாசம் இல்லாமல் ஆண்டவரிடத்தில் இருந்து அற்புதத்தைப் பெற முடியாது. முதலாவது இயேசு என்னோடு இருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். அவரை நோக்கி வேண்டிக் கொள்ளும்போது, அற்புதம் செய்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். அப்படி நீங்கள் விசுவாசிக்கும் போதுதான் பெற்றுக்கொள்ள முடியும் என்று வேதம் சொல்கிறது.

மத்தேயு 9ம் அதிகாரத்தில், இயேசு தெரு வழியாக நடந்து போகும் போது, அவர் இயேசு என்பதை அறிந்தவுடனே இரண்டு குருடர்கள், ''தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்'' என்று இயேசுவை நோக்கி கூப்பிடுகிறார்கள், இயேசு அமைதியாக போய்க் கொண்டேயிருக்கிறார். அவர்கள் விடாமல், தொடர்ந்து கூப்பிடுகிறார்கள். இயேசு ஒரு வீட்டிற்குள் போனபோது அங்கும் வந்துவிட்டார்கள். அப்போது, இயேசு அவர்களைப் பார்த்து, **"...இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்" (மத். 9:28).** அப்பொழுது. இயேசு, ''நீங்கள் விசுவாசித்தபடி உங்களுக்கு ஆகக்கடவது'' என்று சொன்னவுடனே அவர்கள் பார்வையடைந்தார்கள் என்று வசனம் சொல்கிறது.

இப்பொழுது உங்களைப் பார்த்து, ''என் மகனே(ளே), நீ எதிர்பார்த்திருக்கும் அற்புதத்தைச் செய்ய என்னிடத்தில் வல்லமை



உண்டு என்று விசுவாசிக்கிறாயா?'' என்று இயேசு கேட்கிறார். நீங்கள் என்ன பதில் சொல்ல போகிறீர்கள்? உங்கள் பதிலை வைத்துதான் இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்.

லூக்கா 7:37-50ம் வசனங்கள் வரை வாசிக்கும் போது, ஒரு சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு ஒரு வீட்டில் விருந்துக்காக அமர்ந்திருக்கும் போது ஒரு பெண் பாவத்தினால் சமாதானத்தை இழந்து, நிம்மதியை இழந்து, பரிசுத்தத்தை இழந்து இயேசுவைப் பார்க்க வருகிறாள். பாவம் மன்னிக்கப்பட வேண்டும், பாவத்திலிருந்து விடுதலை வேண்டும் என்று இயேசுவிடம் வந்து கண்ணீர் விட்டு அவர் பாதத்தில் விழுந்து அழுகிறாள். அப்பொழுது **"அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்" (லூக்கா 7:50)** உன் விசுவாசம் உன் பாவத்தில் இருந்து உனக்கு இரட்சிப்பை கொடுத்து விட்டது, உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லி இயேசு அனுப்புகிறார்.

அப்படியானால் விசுவாசத்தினால் தான் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும், பாவத்திலிருந்து விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும். என் பாவத்தையும் இயேசு மன்னிப்பார், என் பாவத்திலிருந்தும் இயேசு விடுதலை தருவார் என்று விசுவாசித்தால் இன்றைக்கு விடுதலையையும், பாவ மன்னிப்பையும் பெற்றுக் கொள்ள முடியும். உங்கள் விசுவாசத்தை தேவன் எதிர்பார்க்கிறார். நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும்.

**அன்பான வாலிபர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களோடு பேசியிருக்கிறார். பிரச்சனை, போராட்டம், தேவை, நெருக்கத்தில் என்ன செய்வதென்று கலங்கி நிற்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும், ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இயேசு சொல்லியிருக்கிறார். இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து ஜெபிக்கும் போது, அவர் உங்களுக்கு அற்புதம் செய்வதை உங்களால் பார்க்க முடியும். நீங்கள் கேட்டுக் கொண்ட காரியத்தில் அற்புதத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்! விசுவாசியுங்கள்! ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!**

வேதாகம கதாபாத்திரம்: பெனிட்டா



# அபிமெலேக்கு

## [கிதியோனின் மகன்]

### வாசிக்க: நியாயாதிபதிகள் 9ம் அதிகாரம்



யோசுவாவிற்கு பிறகு ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபோராள், கிதியோன் என பல நியாயாதிபதிகளை தேவன் எழுப்பினார். மேற்குறிப்பிட்ட நியாயாதிபதிகளைக் குறித்து கடந்த மாதங்களில் படித்தோம். இந்த மாதம் இஸ்ரவேலின் ஆறாவது நியாயாதிபதியாகிய அபிமெலேக்கைப் பற்றி பார்க்கலாம்.

**அறிமுகம்**

கிதியோன் இஸ்ரவேல் ஜனங்களை மீதியானியர்களின் கைகளிலிருந்து மீட்ட நியாயாதிபதி; கிதியோன் தன் வேலைக்காரியினிடத்தில் பெற்ற குமாரர்களில் ஒருவன் அபிமெலேக்கு. இவன் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து பெற்றுக் கொண்ட 70 வெள்ளிக் காசைக் கொண்டு வீணருடன் சேர்ந்து ராஜ்ஜியபாரத்திற்காக தன் சகோதரர்கள் 70 பேரையும் ஒரே கல்லின் மேல் கொன்றான். இதில் யோதாம் என்ற கிதியோனின் கடைசி குமாரன் மட்டும் தப்பித்துக் கொண்டான்.

**வாழ்க்கை வரலாறு**

அபிமெலேக்கு இஸ்ரவேலின் ஒரு சிறிய பகுதியை 3 வருடங்கள் ஆட்சி செய்தான். அதன் பிறகு அவனுக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பை உண்டாக்கும் ஆவியை தேவன் வரப்பண்ணினார். சீகேமின் பெரிய மனுஷர் அவனைக் கொலை செய்ய திட்டமிட்டனர். ஆனால் அபிமெலேக்கின் விசுவாசியாகிய சேபூல் அச்சதிதிட்டத்தை சில ஆட்களின் மூலம் அவனுக்குத் தெரியப்படுத்தினான். அதோடு இரவில் பட்டணத்து வாசலில் காத்திருந்து அவர்களைத் தாக்க ஆலோசனையும் கொடுத்தான். அதுபோலவே சீகேம் பட்டணத்து மக்களில் அநேகரை அபிமெலேக்கு வெட்டினான். அதன் பிறகு தேபேசு பட்டணத்திற்கு திரும்பினான். சீகேம் பட்டணத்து மக்களும், தேபேசின் மக்களும் பாதுகாப்பைத் தேடி அப்பட்டணத்தின் நடுவிலிருந்த உயர்ந்த கோபுரத்திற்குள் அடைக்கலமாயினர். அவர்களைத் தீக்கொளுத்துவதற்கு அபிமெலேக்கு ஆயத்தப் படுகையில் ஒரு ஸ்திரீ ஓர் ஏந்திரக்கல்லின் துண்டை அவன் மேல் எறிந்தாள். அது சரியாக அபிமெலேக்கின் தலையில் விழுந்து அவன் மண்டையை உடைத்தது. உடனே அவன் தன் ஆயுததாரியைக் கூப்பிட்டு, ஒரு பெண் என்னைக் கொன்றாள் என்று மற்றவர்கள் பேசாதபடிக்கு, நீ உன் வாளை உருவி என்னைக் கொன்று விடு என்றான். அவனும் அப்படியே அவனைக் கொன்று போட்டான்.

**கற்றுக் கொள்ளும் பாடம்**

அபிமெலேக்கு தன்னுடைய 70 சகோதரர்களைக் கொன்று தன் தகப்பனுக்கு கெடுதல் செய்ததால், தேவன் அவனைத் தண்டித்தார். அவன் எப்படி ஒரேக் கல்லின் மேல் தன் சகோதரர்களைக் கொன்றானோ, அதேபோல் ஒரேக் கல்லினால் அவனும் மரணத்தை சந்தித்தான். எனவே, எப்பொழுதும் தீங்கு செய்வதற்கு முன்பு நன்கு யோசித்து செயல்பட வேண்டும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற ஒரு பழமொழி உண்டு. இன்றைக்கு நாம் நன்மை செய்தால் நாளைக்கு நமக்கு நன்மை கிடைக்கும். தீமை செய்தால் தீமையே நம்மை வந்து சேரும் என்பதே அபிமெலேக்கின் வாழ்க்கை நமக்கு கற்று தரும் பாடமாக இருக்கிறது.

# தமஸ்கு



அன்பு வாலிபர்களே! ‘வேதாகம தேசங்கள்’ என்ற தலைப்பில், ஒவ்வொரு மாதமும், வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில தேசங்களையும், அதன் சிறப்புமிக்க பட்டணங்களையும் குறித்து, பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள்! தொடர்ந்து, இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் பட்டணத்தின் பெயர் “தமஸ்கு”.

தமஸ்கு பட்டணத்தைப் பற்றி நினைக்கும்போது, முதலில் நம் நினைவுக்கு வருபவர், தர்சு பட்டணத்தின் “சவுல்” (பின்னாளில் பவுலாக மாறினார்).

## அறிமுகம்

- அக்காலகட்டத்தில், சவுல், ஆதி அப்போஸ்தல சபை கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதையே தன் குறிக்கோளாக கொண்டிருந்தார்.
- இப்படிப்பட்ட சவுல், பின்னாட்களில், கிறிஸ்துவிற்காக இரத்த சாட்சியாக மரித்ததற்கு, துவக்கமான இடமே இந்த தமஸ்கு ஆகும் (அப். 9:3-6).
- ஆம்! இந்த தமஸ்குவிற்கு செல்லும் வழியில்தான், சவுல் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், அழைப்பையும் அறிந்தார் (ENCOUNTERED CHRIST).

## சிறப்பம்சங்கள்

- தமஸ்கு பட்டணம், தற்போதைய சீரியா தேசத்தின் தலைநகரமாக உள்ளது (DAMASCUS – CAPITAL OF SYRIA).
- சீரியாவின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள இப்பட்டணம் “கிழக்கின் முத்து” என்று அழைக்கப்படும் பசுமையும் அழகும் நிறைந்த ஓர் பட்டணமாகும்.
- சீரியா தேசத்தில் பெரும்பான்மையினர் இஸ்லாமியர்களே என்றபோதிலும், பவுலின் வரலாற்று இருப்புக்கான சில அடையாளங்கள் இன்னும் தமஸ்குவில் உள்ளன.
- வேதாகமத்தில் 2 கொரிந்தியர் 11:32-33ல் குறிப்பிட்டுள்ள சம்பவத்தில், ஒரு கூடையில், ஜன்னல் வழியாக கீழே இறங்கி பவுல் தப்பியதாக நம்பப்படும் இடத்தில், புனித பவுல் தேவாலயம் ஒன்று சீரியா தேசத்தில் கட்டப்பட்டுள்ளது.



# MOUNT Sinai 2023

## கோவை மண்டலம்

### ஈரோட்டில்...

பெத்தானி ஃபெலோஷிப் கத்தீட்ரல்
22, லெனின் தெரு
வினய் நகர், நாடார் ரோடு



**டாக்டர் அன்புராஜன்**

தொடர்புக்கு: 9976066143, 9750722000

### கோவையில்...

CSI கிறிஸ்து ஆலயம்
திருச்சி ரோடு



**பாஸ்டர் பென்ஸ்**
**சகோ. சதீஷ்**

தொடர்புக்கு: 8903405315 9894399599

### ஊட்டியில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
205, கிரீன் பீல்ட், வால்ஷாம் ரோடு



**சகோ. ஜோசப்**

தொடர்புக்கு: 9487026651

### திருப்பூரில்...

TELC ஆலய வளாகம்
கோர்ட் வீதி, சபாபதிபுரம்



**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு: 9944360222 | 9442082200 | 9789731768

## திருநெல்வேலி மண்டலம்

### ஜெபமலையில்...

கீழ மாதாபுரம்,
கடையம் ரோடு




**செல்லாராணி அப்பாத்துரை**

தொடர்புக்கு: 9750955548 8270135303

### சங்கரன்கோவிலில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
காங்கிரஸ் பொன்விழா மைதானம் பின்புறம்
ஷெக்கினா ஹால், முல்லை நகர்
இராஜபாளையம் மெயின் ரோடு



**சகோ. சுதர்சன்**

தொடர்புக்கு: 9677858766 8344949555

### திருநெல்வேலியில்...

செல்வி கல்யாண மஹால்,
முருகன்குறிச்சி,



**சகோ. ஞானேஷ்**

தொடர்புக்கு: 9750955548 9488212915

### நாகர்கோவிலில்...

ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி
பார்வதிபுரம், நாகர்கோவில்



**சகோ. ராஜேந்திரன்**

தொடர்புக்கு: 9976066143

### நாலுமாவடியில்...

தேவனுடைய கூடாரம்
நாலுமாவடி



**சகோ. அந்தோணி தாஸ்**
**சகோ. நல்லதம்பி சார்லஸ்**

தொடர்புக்கு : 9750955547, 04639-353535

### சித்தூரில்...



St. Luke's Telugu Church
பாரீஸ் ஹால்,

**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு: 94877 34603

### புத்தூரில்...



Good Shepherd compound,
Puttur.

**சகோ. பிரவீன்**

தொடர்புக்கு: 88867 39633

(வாலிபர்கள் ஒருநாள் உபவாசக் கூடுகை)

**நாள்:**

# நவம்பர் 11

**(சனிக்கிழமை)**

**நேரம் :**

**காலை 9 மணி முதல்**
**மாலை 4 மணி வரை**

## மதுரை மண்டலம்

### தேனியில்...

இயேசு பண்ணை,
கம்பம் ரோடு



சகோதரி அனிதா பானு,
சகோதரி வசந்தி

தொடர்புக்கு: 9750955548
8489811498

### விருதுநகரில்...

கிராம மிஷனெரி இயக்கம்
கெத்செமனே வளாகம்
புல்லக்கோட்டை



பாஸ்டர் ஜான் கே.

தொடர்புக்கு: 9787768683
9750955548 I 97157601012

### திண்டுகல்லில்...

இடம் பின்னர்
அறிவிக்கப்படும்



சகோ. டேவிட் கணேசன்

தொடர்புக்கு: 9844105044
9952865683

### மதுரையில்...

P T R John's Hotel,
மாட்டுத்தாவணி,
ஆம்னி பஸ் நிலையம் எதிரில்



சகோ. ஜான் வெஸ்லி

தொடர்புக்கு: 9750955548

### இராமநாதபுரத்தில்...

வலம்புரி மஹால்,
பழைய பேருந்து நிலையம் அருகில்,
ரயில்வே பீடர் ரோடு




பாஸ்டர் ஷாஜின்

தொடர்புக்கு: 9750955548

## கடலூர் மண்டலம்

### கடலூரில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
93 நேதாஜி ரோடு,
(மணிக்கூண்டு எதிரில்) மஞ்சக்குப்பம்



சகோ. ஜெபசிங்

தொடர்புக்கு: 9965144000
9442885315

### விழுப்புரத்தில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
HH Complex, நம்நாடு டெக்ஸ்டைல்ஸ் எதிரில்,
சாந்தி தியேட்டர் ரோடு



சகோ. பொற்செல்வன் ஆசீர்

தொடர்புக்கு: 8870517324
9442885315

### பாண்டிச்சேரியில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
கோட்டுப்பாளையம், லாஸ்பேட்
(லதா ஸ்டீல் எதிரில்), ECR ரோடு




சகோ. டேவிட் ஜெபசிங்

தொடர்புக்கு: 8344433800
9442885315

### நாகப்பட்டினத்தில்...

சீயோன் ஜெப ஆலயம்
தெற்கு வீதி, திருமாளம், தலைஞாயிறு
வேதாரணயம்



சகோ. ராபர்ட் வால்ட்டர்

தொடர்புக்கு: 9787642188
8838456394

### திருவாரூரில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
S.A ரைஸ் மில் காம்ப்ளெக்ஸ்
6-229-3, TTP மெயின் ரோடு
புலிவலம்



சகோ. மேஷாக்

தொடர்புக்கு: 9976766322

## மும்பையில்...



சகோ. ஜான் கிளிட்டஸ்

World Revival Prayer Center, T/1, Block No.11 90 Feet Road
Rajiv Gandhi Nagar Dharavi, Mumbai

தொடர்புக்கு: 9004882470 I 8082410410



சகோ. ரத்தின சற்குணம்

# எபிரெய மருத்துவச்சிகள்

## குழந்தையைப் பாதுகாக்க துணிவுடன் செயல்பட்டார்கள்...



யோசேப்பின் காலத்திற்குப் பிறகு தோன்றிய எகிப்தின் ராஜா, சிப்பிராள், பூவாள் என்ற இரண்டு மருத்துவச்சிகளை அழைப்பித்து ‘‘எபிரேய ஸ்திரீகளுக்கு பிரசவம் பார்க்கும் போது, பெண் பிள்ளைகளை உயிரோடே வைத்து, ஆண் பிள்ளைகளை கொன்று போட கட்டளையிட்டான். ஆனால் அந்த இரண்டு எபிரெய மருத்துவச்சிகளும் பார்வோனுக்கு பயப்படாமல், தேவனுக்கு பயந்ததினால் எபிரெயருக்கு பிறந்த ஆண் பிள்ளைகளை பார்வோன் கட்டளைப்படி கொலை செய்யாமல் துணிவுடன் காப்பாற்றினர். பார்வோனைப் பிரியப்படுத்துவதைவிட கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவனை காப்பாற்ற துணிந்து செயல்பட்டனர். அதுமட்டுமல்லாமல் பார்வோன் மருத்துவச்சிகளிடம் ஆண் பிள்ளைகளை நீங்கள் காப்பாற்ற காரியம் என்ன என்று கேட்டபோது, எபிரெய ஸ்திரீகள், எகிப்திய ஸ்திரீகளைப் போல் அல்ல, அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள், நாங்கள் போகும் முன் அவர்களே பிரசவிக்கிறார்கள் என்று மிகவும் துணிச்சலுடன் பேசினார்கள். இதனால் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்து, அவர்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி செய்தார் (வாசிக்க: யாத். 1:15-22).

**அன்பான வாலிபர்களே! நன்மை செய்வதற்கு துணிந்து முன்வர வேண்டும். அன்று அந்த இரண்டு மருத்துவச்சிகளும் துணிந்து செயல்பட்டதினால் அவர்கள் குடும்பங்கள் மட்டுமின்றி அநேக எபிரேய குடும்பங்களும் தழைத்து பெருகும்படி தேவன் செய்தார். நீங்களும் நன்மை செய்வதற்கு துணிந்து ஓடுங்கள்!**

# பினெகாஸ்

## பாவத்தை எதிர்க்க துணிந்து செயல்பட்டார்...

பாலாக் என்பவன் பிலேயாமுக்குப் பணத்தைக் கொடுத்து இஸ்ரவேலரை சபிக்கும்படி எவ்வளவு முயற்சித்தும் அவனால் சபிக்க முடியவில்லை. அதனால் பிலேயாம் பாலாக்கிடம் இஸ்ரவேல் மக்களைத் தேவனிடமிருந்து பிரிக்க மோவாபியர்களைத் தூண்டி அவர்களுடைய விக்கிரகங்களை வழிபடச் செய்தும், வேசித்தனம் பண்ணச் செய்தும் அவர்களைத் தேவனை விட்டுப் பிரிக்க முயற்சிக்குமாறு கூறினான் (எண். 31:15,16; 2 பேதுரு 2:5; யூதா 1, வெளி. 2:14). அதன்படியே இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள். பாவம் பாளையத்தில் பெருகின போது தேவ கோபம் பற்றியெரிந்தது. ஜனங்கள் பெரும் வாதையினால் வாதிக்கப்பட்டனர். தேவ கோபம் நீங்க தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள் செய்தவர்களை நடுப்பகலில் கர்த்தருடைய சன்னிதானத்தில் தூக்கிப்போடக் கட்டளையிட்டார். மோசேயும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் ஆசாரிப்புக் கூடாரத்திற்கு முன்பாக அழுது கொண்டிருந்த போது, பினெகாஸ் என்னும் வாலிபன் மாத்திரம் தேவன் மீதுள்ள பக்தி வைராக்கியத்தினால் கோபம் கொண்டு, துணிந்து நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே எடுத்துக் கொண்டு, சிம்ரி என்ற மனிதன் கஸ்பி என்னும் மீதியானிய ஸ்திரீயோடு வேசித்தனம் பண்ணும் அறைக்குள் போய் அவர்கள் இருவருடைய வயிற்றிலும் குத்தி இருவரையும் கொன்று போட்டான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று. (வாசிக்க: எண். 25ம் அதிகாரம்).



**அன்பு வாலிபர்களே! பினெகாசுக்கு தேவன் மீதிருந்த பக்தி வைராக்கியம் அவனுக்குப் பாவத்தின் மீதிருந்த வெறுப்பை வெளிப்படுத்தியது. கர்த்தரின் சித்தத்தைச் செய்யத் தைரியம் தேவை. பயமும் திகிலுமுள்ளவர்களால் தேவனுடைய சித்தத்தைச் செய்ய முடியாது. துணிகரமாகப் பாவம் செய்ய துணிவு இருக்கும் போது அதனை தடுக்க தேவ பிள்ளைகளாகிய நமக்கு எத்தனை துணிவு வேண்டும் என்பதை யோசித்து பாருங்கள்.**

# அம்னோன்

## மதிகேடான காரியத்தை செய்யத் துணிந்து சென்றான்...



தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்கு தாமார் என்ற சௌந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள். தாவீதின் மற்றொரு குமாரனாகிய அம்னோன் அவளுடைய அழகில் மயங்கி, அவள் மீது மோகம் கொண்டு வியாதிப்பட்டான். அவள் புருஷனை அறியாதவளாய் இருந்தபடியால் அவளுக்கு தீங்கு செய்வதற்கு அம்னோன் வருத்தம் கொண்டான். அவன், யோனதாப் என்ற தந்திரவாதியாகிய தன் சிநேகிதனின் துர்ஆலோசனைப்படி, வியாதிக்காரனைப் போல் நடித்து, தன் தங்கையாகிய தாமாரை தன் தகப்பனாகிய தாவீதின் மூலமே வரவழைத்து, சமைத்து தரக்கூறி அவளிடம் தவறாக நடக்க முயன்றான். தாமார், 'என் சகோதரனே, என்னை அவமானப்படுத்தாதே, இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தை செய்ய வேண்டாம்' என்று எவ்வளவு கெஞ்சியும், அவள் சொல்லைக் கேளாமல் அம்னோன் அவளை பலவந்தப்படுத்தி தன் சகோதரி என்று கூட பாராமல் துணிகரமாய் அவளிடம் தவறாக நடந்து கொண்டான். இந்த காரியத்திற்குப் பிறகு தாமார் மேல் அம்னோன் கொண்ட மோகம் வெறுப்பாக மாறி, அவளை இழிவாக நடத்தி, வீட்டை விட்டு வெளியே தள்ளி கதவைப் பூட்டச் செய்தான். இதனை அறிந்த தாமாரின் சொந்த சகோதரனான அப்சலோம் மிகவும் கோபம் கொண்டு, அம்னோனை இரண்டு வருடங்களுக்குப் பிறகு விருந்து ஒன்றுக்கு அழைத்து, அவன் திராட்சரசம் குடித்து களித்திருக்கும் போது, அப்சலோமின் வேலையாட்கள் அவனை அடித்துக் கொன்றார்கள் **(வாசிக்க: 2 சாமு. 13:1-18).**

**அன்பான வாலிபர்களே! தவறான ஆலோசனையினால் இச்சையான காரியத்தை செய்வதற்கு துணிகரமாக செயல்பட்டான் அம்னோன். அதினால் மரணத்தை சந்திக்க நேர்ந்தது. இந்த வாலிப வயதில் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை துணிந்து செய்யாமல் அதை எதிர்த்து நிற்கும் துணிவு உங்களுக்குள் உள்ளதா?**

# 3 பராக்கிரமசாலிகள்

## தாவீதின் விருப்பத்தை நிறைவேற்ற துணிந்து சென்றனர்...

சவுலின் மறைவுக்குப் பின் தாவீது இஸ்ரவேல் அனைத்தின் மீதும் ராஜாவானார். பெலிஸ்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது, தாவீது அதுல்லாம் என்னும் கெபியில் மறைந்திருந்தார். பெலிஸ்தியர்கள் தாவீதைச் சுற்றிலும் வளைந்திருந்தனர். தாவீது ஒருநாள் பெத்லகேமின் ஒலிமுக வாசலில் இருந்த கிணற்றிலிருந்து தண்ணீரைக் குடிக்க ஆசைப்பட்டான். ஆனால் இப்பொழுது பெலிஸ்தியர் அதை ஆக்கிரமித்திருந்தனர். எனவே அதனைப் பார்த்ததும் அதிலிருந்து தண்ணீர் குடிக்க வேண்டுமென்று மிகுந்த ஆவல் கொண்டு, தன் வீரர்களைப் பார்த்து அந்த கிணற்றிலிருந்து என் தாகத்திற்கு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார் என்று கேட்டதும் தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளான யோசேப்பாசெபெத், எலெயாசார் மற்றும் சம்மா என்பவர்கள், பெலிஸ்தரின் பாளயத்திற்குள் துணிந்து புகுந்து போய், அந்த கிணற்றிலிருந்து தண்ணீர்மொண்டு தாவீதிடம் கொடுத்தனர். எதிரியின் தாணையத்திற்குள் சிறிதும் பயமின்றி தங்கள் பிராணனை எண்ணாமல் துணிந்து போய் அந்த மூன்று பராக்கிரமசாலிகள் கொண்டு வந்த தண்ணீரை குடிக்க மனதில்லாமல் அதை கர்த்தருக்கென்று ஊற்றிப் போட்டான். (வாசிக்க: 2 சாமு. 23:8-17).



**அன்பு வாலிபர்களே! இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் தங்கள் ஜீவனை பணையம் வைத்து, எதிரியின் எல்லைக்குள் துணிந்து போய் தண்ணீர் கொண்டு வந்து, தங்கள் ராஜாவின் விருப்பத்தை நிறைவேற்றினர். இன்று உங்கள் தேவனாகிய கர்த்தரின் இருதய விருப்பமாகிய சுவிசேஷம் அறிவிக்கும் பணியை எதற்கும், யாருக்கும் அஞ்சாமல் துணிவுடன் செய்ய ஆயத்தமாய் நீங்கள் இருக்கின்றீர்களா?**

யோசனையில் பெரியவர்!



# பெலிஸ்தியர் முறியடிக்கப்படுதல்...

நிகழ்வு: கெத்சி கிளாரின்

வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக யுத்தங்களும் போராட்டங்களும் வந்த போது, அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளைப் பற்றி இந்த ''யோசனையில் பெரியவர்'' என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். அந்த வரிசையில் இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் பகுதி 'இஸ்ரவேலனைத்தின் மேலும் அரசராக பொறுப்பேற்றவுடன் தாவீது சந்தித்த முதல் யுத்தமாகும்'.

பெரும் பலங்கொண்ட நியாயாதிபதியாகிய சிம்சோன் மற்றும் 40 வருடம் அரசாண்ட சவுல் போன்ற எத்தனையோ வல்லவர்களால் முற்றிலுமாக முறியடிக்கப்பட முடியாத பெலிஸ்தியர்களை, சமஸ்த இஸ்ரவேலின்மேல் ராஜாவாக பொறுப்பேற்று சில நாட்களே ஆன புது அரசனாகிய தாவீது வென்ற சம்பவமே இது.

ஆம்! தாவீது அரசனுக்கு விரோதமாய் பெலிஸ்த சேனைகள் ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் வந்து பரவியிருந்தார்கள் (1 நாளாகமம் 14:9). அப்பொழுது தாவீது இந்தக் காரியத்தைக் குறித்து தேவனிடத்தில் விசாரித்தார். **"பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது தேவனைக் கேட்டபோது, கர்த்தர்: போ, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்" (I நாளா. 14:10).**

கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தாவீது பெலிஸ்தரோடு போரிட்டு அவர்களை முறியடித்தான். தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல, தேவன் தாவீதின் கையினால் அவன் சத்துருக்களை உடைந்தோடப்பண்ணினார் (I நாளா. 14:11). ஆனால் அவர்கள் முழுவதுமாக முறியடிக்கப்படாமல் ஓடிப்போனார்கள். சில நாட்களுக்கு பின்பு மறுபடியும் பெலிஸ்தர் அதே பள்ளத்தாக்கில் வந்து இறங்கினார்கள். அப்பொழுது தாவீது திரும்பவும் தேவனிடத்தில் சென்று விசாரித்த போது கர்த்தர், பெலிஸ்தரை முற்றிலுமாக முறியடிக்க சில யுக்திகளை தாவீதுக்கு கற்றுக் கொடுத்தார். அதென்னவென்றால், **"...நீ அவர்களுக்குப் பின்னாலே போகாமல், அவர்களுக்குப் பக்கமாய்ச் சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, யுத்தத்திற்குப் புறப்படு; பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, தேவன் உனக்கு முன்னே புறப்பட்டிருப்பார் என்றார்" (I நாளா. 14:14,15).**

இங்கு தேவன் தாவீதுக்கு ஒரு அறிகுறியைக் கொடுக்கிறார். அதாவது முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளில் ஒரு இரைச்சலை நீ கேட்பாய், அதுவே நீ யுத்தத்திற்கு போகலாம் என்பதற்கு அறிகுறி, அதுவரை பொறுமையுடன் அறிகுறிக்கு காத்திரு என்பதாக சொன்னார். இந்த முசுக்கட்டை இலைகளின் இரைச்சலைப் பற்றி வேதாகம ஆராய்ச்சியாளர்கள் கூறும் போது, தாவீதுக்கு முன்பாக கடந்து சென்று பெலிஸ்திய படைகளை சங்கரிக்க தேவன் அனுப்பிய தமது தூதர் சேனைகளின் இரைச்சல் என்பதாக கூறுகின்றனர். அந்த தூதர் சேனைகள் காற்றில் விமானப்படையைப் போல் முசுக்கட்டைச் செடிகளுக்கு மேலாக கடந்து சென்ற போது ஏற்பட்ட இரைச்சலே அதுவாம். இப்படி தாவீது தேவன் அவனுக்கு கற்பித்தபடியே எல்லாவற்றையும் செய்தபோது, கர்த்தர் பெலிஸ்தரின் முழு இராணுவத்தையும் முறியடிக்க உதவி செய்தார்.

எவராலுமே முறியடிக்கப்பட முடியாத பெலிஸ்தியரை, புதிய அரசனாகிய தாவீது முற்றிலுமாய் சங்கரித்து யுத்தத்தில் வென்றார். தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பிரசித்தமாகி, தாவீதுக்கு பயப்படுகிற பயத்தைக் கர்த்தர் சகல ஜாதிகளின்மேலும் வரப்பண்ணினார் (I நாளா. 14:17).

புதிர்: ரேச்சல்

BIBLE Treasure Hunt

# வேதாகம புதையல் வேட்டை

வேதத்திலுள்ள வயதான மக்களை அவர்களுக்கு ஏற்றார்போல் எதிரே உள்ளவற்றோடு பொருத்திக் காட்டி, விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

| | |
|---|---|
| 1. காலேப் | A இந்தப் படுத்த படுக்கையாக உள்ள இராஜாவுக்கு எத்தனை வஸ்திரங்களால் மூடினாலும் அவனுக்கு அனல் உண்டாகவில்லை. |
| 2. ஆசா | B இந்த 147 வயதுடைய மனிதன் தன்னுடைய மகனிடம் எகிப்திலே தன்னை அடக்கம்பண்ணாதிருக்கும்படி உறுதிமொழி வாங்கினான். |
| 3. மெத்தூசலா | C இந்த 85 வயதுடைய முதியவர் தனக்கு மலைநாடு வேண்டும் என்று கேட்டான். |
| 4. பர்சிலா | D 120 வயதுடைய இந்தத் தலைவனுக்கு தான் மரிக்கும்போது அவன் கண் இருளடையவில்லை, பெலன் குறையவுமில்லை. |
| 5. ஆபிரகாம் | E இந்த இராஜாவுக்கு இவன் வயதான காலத்தில் இவன் கால்களில் வியாதிக் கொண்டிருந்தது |
| 6. சாலொமோன் | F 80 வயதாகிய இந்த மனிதன், இராஜாவின் வீட்டில் வாழும்படியாய் அழைப்பு வந்த போது, தான் முதியவனானதினிமித்தம் அழைப்பை நிராகரித்தான். |
| 7. யாக்கோபு | G இந்த மனிதன் சரித்திரத்திலேயே அதிக வருடம் வாழ்ந்தவன். |
| 8. ஏலி | H இந்த ராஜா அந்நிய ஜாதியாகிய தன்னுடைய மனைவிகளுக்காக, தன் தேவனாகிய கர்த்தரை விட்டு தன் இருதயத்தை திருப்பினான். |
| 9. மோசே | I 99 வயதான இவனுடைய பெயர் மாற்றப்பட்டது. |
| 10. தாவீது | J இந்த வயதான மனிதன் ஆசனத்திலிருந்து பின் பக்கமாக விழுந்து பிடரி முறிந்து செத்தான். |

## கடந்த மாத வெற்றியாளர்:

சகோதரி **புவனா,** (ஆம்பூர்)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.10.2023**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்

**மேலிருந்து கீழ்**

2. எட்டி (வெளி. 8:11)
3. அத்தேனே (அப். 17:16)
5. சிம்ரி (1 இராஜா. 16:15)
6. தாலந்து (மத்தேயு)
7. கிறிஸ்பு (அப். 18:8)
8. யாவீர் (நியா. 10:3,4)
11. பாதை (சங். 119:105)

**வலமிருந்து இடம்**

1. அபிமெலேக்கு (நியா. 9:5)
4. எப்ராயீம் (ஓசியா 7:1)
9. நாவு (யோவான் 3:6)
10. பூமி (யோபு 26:7)
12. தேவன் (தீத்து 1:3)

# தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்!

சரித்திரம்: ஜெயசீலன்



## தாவீதின் ஆளுகை!

**அன்புத் தம்பி, தங்கையரே! நாம் தொடர்ந்து இந்த சரித்திரப் பகுதியில், தாவீதை மையமாக வைத்து தியானித்து வருகிறோம். தாவீது தனது 30ஆம் வயதில் (2 சாமு. 5:4) இராஜாவாகி, தனது 70ம் வயது வரை, யூதாவை 7 ஆண்டுகள், சமஸ்த இஸ்ரவேலை 33ஆண்டுகள் என சுமார் 40 ஆண்டுகள் அரசாட்சி செய்தார். எத்தனையோ மன்னர்கள் இஸ்ரவேலை ஆட்சி செய்த போதிலும், ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன் (அப். 13:22) என தாவீதைக் குறித்து மட்டுமே கர்த்தர் சாட்சிக் கொடுத்தார். முழு வேதாகமத்திலும், தன் இருதயத்திற்கு ஏற்றவன் என எந்த ஒரு தனி மனிதனையும் குறித்து இப்படி ஒரு சாட்சியைக் கர்த்தர் சொன்னதில்லை. காரணம் என்ன? அப்படி தாவீதிடம் காணப்பட்ட தனித்துவம் (Individuality) அல்லது அவரின் குணாதிசயம் (Character) என்ன?**

### கர்த்தரிடத்தில் விசாரிக்கும் குணம்!

என் அன்பு வாலிப் பிள்ளைகளே! தாவீது எதைச் செய்தாலும் தன் இஷ்டத்திற்கோ, தன் மனைவிகளின் சொற்கேட்டோ அல்லது தன் ஆலோசகர்கள், தளபதிகள் என யாரிடமும் விசாரிப்பதில்லை. மாறாக தன் தேவனாகிய கர்த்தரிடத்தில், ஆண்டவரே, நான் இதைச் செய்யட்டுமா? நாங்கள் இவர்களைப் பின் தொடரலாமா? எங்களுக்கு வெற்றி கிடைக்குமா? நான் எங்கு செல்ல வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என விசாரித்து, கர்த்தருடைய ஆலோசனைப் படி செய்கிற ஒரு குணம் இருந்தது (1 சாமு. 23:2,4; 2 சாமு. 2:1; 5:19,23; 1 நாளா. 14:10)

1 சாமு. 30ல் அமலேக்கியர், தாவீதின் வசிப்பிடமான சிக்லாக் பட்டணத்திற்கு வந்து, எல்லா வற்றையும் கொள்ளையடித்து, அங்கிருந்த எல்லாக் குடிமக்களையும், பிள்ளைகளையும், தாவீதின் மனைவி களையும் சிறைப்பிடித்து, அந்த நகரத்தைத் தீயினால் சுட்டெரித்து விட்டுப் போய்விட்டார்கள் (30:1-3).



தாவீதும் அவரோடு யுத்தத்திற்குச் சென்றவர்களும் திரும்பி வந்து, இந்தக் காட்சியைப் பார்த்து, தங்களுக்கு இந்த நிலை ஏற்பட தங்கள் தலைவன் தாவீதுதான் காரணம் என, தாவீதைக் கல்லெறிந்து கொல்லத் திட்டமிட்டனர். அப்படி மரணத்தின் விளிம்பிலிருந்த சூழ்நிலையிலும், தாவீது, தன் பெலனை நம்பவில்லை, தன் உடனிருந்தவர்களிடம் ஆலோசனைக் கேட்கவில்லை, மாறாக அவர் கர்த்தரை நோக்கி (30:8) இரண்டு கேள்விகளைக் கேட்கிறார். கர்த்தருடைய ஆலோசனையைப் பெற்றுச் செல்கிறார். அந்த யுத்தத்தில் அமலேக்கை வீழ்த்தி, தாங்கள் இழந்ததில் ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டார்.

1 நாளா. 14:10ல், பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா என்று தாவீது தேவனைக் கேட்டபோது, கர்த்தர்: போ, அவர்களை ஒப்புக் கொடுப்பேன் என்றார். கர்த்தருடைய வார்த்தையின்படி போனதால், 1 நாளா. 14:11ம் வசனத்தில், 'தண்ணீர்கள் உடைந்தோடுகிறது போல, தேவன் என் கையினால் சத்துருக்களை உடைந்தோடப்பண்ணினார்' என்று தாவீது கூறுகிறார்.

பிள்ளைகளே! இந்த வாலிப வயதில் நீங்களும் கூட, நான் என்ன படிக்க வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? இந்த வேலைக்கு விண்ணப்பிக்கட்டுமா? இந்த மணமகன் அல்லது மணமகள் எனக்கு ஏற்றவரா? என பதில் தரும் ஆண்டவரிடம் விசாரித்துப் பாருங்கள்! மன்னன் தாவீதுக்கு ஆலோசனை தந்து, வெற்றி சிறக்கச் செய்த தேவன் உங்களுக்கும் ஆலோசனைக் கொடுத்து ஜெயம் பெற்றவர்களாக வாழும்படி உதவி செய்வார்.

## நேசிக்கும் குணம்!

தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டு, சவுலின் அரண்மனைக்கு எப்போது வந்தாரோ, அன்று முதல் சவுல் தாவீதின் மேல் பொறாமை கொண்டு, (1 சாமு. 18:9) அவரை எப்படியாவது கொன்று விட வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டேயிருந்தார் (1 சாமு. 18:11; 19:10; 20:31). சவுலுக்குப் பயந்து தாவீது, காடுகளிலும், குகைகளிலும், மலைகளிலும் உயிருக்கு பயந்து மறைந்து வாழ்ந்தார். மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரம் மாத்திரம் இருக்கிறது (1 சாமு.20:3) என்று தாவீது புலம்புகிறார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னைக் கொலை செய்யத் துரத்தும் மன்னன் சவுலை, இரண்டு முறை காட்டிலேயே வைத்துக் கொலை செய்ய (1 சாமு. 24:4; 26:9) நல்ல வாய்ப்பு தாவீதுக்குக் கிடைத்தது. ஆனால் தாவீதோ சவுலைக் கொல்லாமல், அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட என் ஆண்டவன் என்று சொல்லி, என் தகப்பனே (1சாமு. 24:11) என அழைத்துத் தன் அன்பை வெளிப்படுத்தினார்.

அதுபோல, ஆடு மேய்க்க தன்னை அனுப்பிய தன் தகப்பனையும், தாயையும் தன்னோடு வைத்துப் பாதுகாத்தார் (1 சாமு. 22:3). இப்படிப்பட்ட நற்குணங்களே, மன்னன் தாவீதின் ஆளுகையின் வெற்றியாயிருந்தது. நாளாகமம் புத்தகங்களை வாசித்துப் பாருங்கள்! கர்த்தருக்குப் பிரியமாயிருந்த மன்னர்கள், தங்கள் தகப்பனாகிய தாவீதைப் போல, செம்மையான வழியில் நடந்தார்கள் என்பதாக குறிக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக நமது ஆண்டவரே, தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார்.

**அன்பு வாலிபர்களே! உங்களை வெறுக்கிறவர்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். தீமையை நன்மையால் வெல்லுங்கள் (ரோமர் 12:21). உங்கள் வாழ்வும் மன்னன் தாவீதின் ஆளுகையைப் போல வெற்றி சிறந்த வாழ்வாயிருக்கும்.**



# ஜெபக்கையேடு

அக்டோபர் 2023

ஜெபம்: பெனிட்டா

**1.** இந்தியாவில் உள்ள சுமார் 21 லட்சம் காவலர்களின் பாதுகாப்பிற்காகவும், சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**2.** இந்தியாவில் பணிபுரியும் சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமான பெண் காவலர்கள் மீது தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபியுங்கள்.

**3.** இந்தியாவில் செயல்பட்டு வரும், சுமார் 16,855 காவல் நிலையங்கள் சீரான முறையில் செயல்பட ஜெபியுங்கள்.

**4.** காவல்துறையில் உள்ள காலிப் பணியிடங்கள் தகுந்த நபர்களைக் கொண்டு நிரப்பப்பட ஜெபியுங்கள்.

**5.** பெண் காவலர்களுக்கு நீண்ட நேரபணியின் போது, அத்தியாவசியத் தேவைகள் பூர்த்திச் செய்யப்பட ஜெபியுங்கள்.

**6.** இந்தியாவில் உள்ள மொத்த காவலர்களில் 10.30% பேர் பெண் காவலர்களாக பணிபுரிகிறார்கள். இவர்களுக்கு கர்த்தர் நல்ல ஞானத்தை கொடுக்கவும், அந்த துறையில் அவர்கள் சிறந்து விளங்கவும் ஜெபியுங்கள்.

**7.** மன அழுத்தம், குடும்ப சூழ்நிலை, அதிக வேலைப்பளு போன்ற காரணங்களின் நிமித்தம் காவலர்கள் தற்கொலை செய்து வருகிறார்கள். தற்கொலையின் ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.





**8.** கடந்த 3 ஆண்டுகளில் 436 மத்திய ஆயுதப்படை காவலர்கள் தற்கொலை செய்துள்ளனர். இனி யாரும் தற்கொலை செய்து மரிக்க கூடாது என்று கருத்தாய் ஜெபியுங்கள்.

**9.** மழை மற்றும் நிலச்சரிவுகளால் நம் தேசத்தில் ஏற்படும் அதிக உயிரிழப்புகள், பாதிப்புகள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

**10.** அநேக இடங்களில் காட்டுத்தீ பரவி பாதிப்புகள் ஏற்படுவது தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

**11.** சுமார் 70% விவசாயிகளைக் கொண்ட இந்திய வேளாண் துறையில் மாற்றம் உண்டாக ஜெபியுங்கள்.

**12.** குறுந்தொழில் செய்யும் இலட்சக்கணக்கான மக்களின் தொழில்கள் பாதிக்கப்படாமலிருக்க ஜெபியுங்கள்.

**13.** வேலைக்காக காத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்க ஜெபியுங்கள்.

**14.** ஓரினச்சேர்க்கை என்னும் சோதோம் கொமோரா பாவம் நம் தேசத்தை விட்டு விலகவும், இப்பாவத்திற்கு அடிமையாயிருக்கும் ஒவ்வொருவரும் மனந்திரும்பவும் ஜெபியுங்கள்.

**15.** ஓரினச்சேர்க்கைக்கு அனுமதி அளிக்கும் தேசங்களையும், தேசத் தலைவர்களையும் தேவன் தொடும்படி ஜெபியுங்கள்.

**16.** இந்தியாவிலுள்ள சிறார்களின் இரட்சிப்பிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

**17.** இந்தியாவில் அதிகரித்து வரும் சிறார் குற்றங்கள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

**18.** குற்றத்தில் ஈடுபடுபவர்களில் 76% பேர் 16 வயது முதல் 18 வயதுகுட்பட்ட சிறார்கள். இவர்களுக்கு பின் இருந்து செயல்படும் ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

**19.** இந்தியாவில் இணையதளத்தை பயன்படுத்தும் சுமார் 69 கோடி பேர், அதை தவறான காரியங்களுக்கு பயன்படுத்தாதபடி ஜெபியுங்கள்.

**20.** சமூக வலைத்தளங்களை சுமார் 46 கோடி மக்கள் பயன்படுத்துகிறார்கள். பயன்படுத்தும் ஒவ்வொருவரும் ஞானமாய் தங்கள் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**21.** ஒரு நாளைக்கு 2 முதல் 6 மணி நேரம் வரை சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகிறவர்கள் அநேகர். இவர்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள்.

**22.** இந்தியாவில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 18% அதிகரித்து இருக்கும் இணையவழி குற்றங்கள் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

**23.** ஆபாசமான புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் செய்திகளை அனுப்புவது போன்ற குற்றங்கள் வலைத்தளங்கள் மூலமாக நடைபெறுவது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

**24.** சமூக வலைத்தளங்களுக்கு அடிமைப்பட்டு மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், பாதிக்கப்பட்டிருக்கும் வாலிபர்கள் விடுதலையாக்கப்பட ஜெபியுங்கள்.






**25.** சமூக வலைத்தளங்களில் வாலிபர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சாத்தானின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

**26.** சமூக வலைத்தளங்களை 15 வயது முதல் 35 வயது வரை உள்ள வாலிபர்களே அதிகமாக பயன்படுத்துகிறார்கள். அவர்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள்.

**27.** நம் தேசத்தில் உள்ள சபை விசுவாசிகள் மற்றும் போதகர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாக ஜெபியுங்கள்.

**28.** இந்தியாவில் இருக்கும் அனைத்து திருச்சபைகளும் சுவிசேஷம் அறிவிக்கும் சபைகளாக மாற ஜெபியுங்கள்.

**29.** கள்ளப் போதனைகளை சபைகளுக்குள் கொண்டு வர எத்தனிக்கும் சாத்தானின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

**30.** சபை மற்றும் ஊழியர்களுக்கு எதிராக கிரியை செய்ய நினைக்கும் சாத்தானின் திட்டங்கள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

**31.** எழுப்புதலின் அக்கினி, வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகள் மீது ஊற்றப்படவும், வாலிபர்களும், சிறுவர்களும் எழுப்புதலின் அக்கினியைப் பரவச் செய்கிறவர்களாக மாறவும் ஜெபியுங்கள்.

***தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!***




Igniters Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!



## EVERY 1st SUNDAY (1st Oct.)

### MUMBAI – DHARAVI (5PM – 8PM)
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna
Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj
College Rd. 9442885315

### TIRUPATI (3PM)
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (14th Oct.)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21,
Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (8th Oct.)

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

### MUMBAI-MALAD (2:30PM – 5PM)
Bethel 1st Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

### MUMBAI - THANE (4PM – 6:30PM)
9004882470

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

### KOVILPATTI (3PM -5:30PM)
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:30PM)
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary
School Mela Sathankulam.
9442885315

### CHENGALPET (3PM – 5:30PM)
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

### VILLUPURAM (3PM – 5:30PM)
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (15th Oct.)

### TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

### COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

### TRICHY (3 PM)
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

### JEBAMALAI (2 PM)
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

### CHENNAI (3 PM)
VGP Victory House, Mount Road
9488475315

### NALUMAVADI (3PM -5:30PM)
Tabernacle of God,
Nalumavadi
9442885315

### TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

### RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

### ERODE (4PM – 6:30PM)
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

### NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

### PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

### PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre,VK Road.
9442885315

### CHITTOOR (3PM TO 6PM)
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (28th Oct.)

### PERAMBALUR (5PM -8PM)
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (22nd Oct.)

### THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

### KRISHNAGIRI (3 PM – 5PM)
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

### KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
YouTube
Comforter DIGITAL CHANNEL
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 29th OCTOBER
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

பேசலாம் வாங்க: வயலா



# Coffee with பத்திரிக்கையாளர்

## யெப்தாவின் மகள்

ஒவ்வொரு வருட துவக்கத்திலும் அனுதினமும் வேதாகமத்தில் பத்து அதிகாரம் வாசிப்பேன், ஒரு மணி நேரம் ஜெபிப்பேன், நண்பர்களுடன் ஊர் சுற்ற மாட்டேன் என்று பலவித பொருத்தனைகளை பலர் செய்வதுண்டு. ஆனால் ஒரு வாரம் கூட செய்த பொருத்தனையை கடைப்பிடிக்க முடியவில்லை என்று கூறுபவர்களும் உண்டு. இவர்களுக்கெல்லாம் மாபெரும் சவாலாக, தான் பெற்ற ஒரே மகளை கர்த்தரிடம் செய்த பொருத்தனையின் நிமித்தம் சர்வாங்க தகனபலி செலுத்திய யெப்தா என்ற தகப்பனையும், அவருக்கு முழு ஒத்துழைப்பு அளித்த யெப்தாவின் மகளைக் குறித்தும் நியாயாதிபதிகள் 11ம் அதிகாரத்தில் பார்க்கலாம். இவர்களுடனான சந்திப்பின் கற்பனைத் தொகுப்பை கீழ்க் காண்போம்.

**பத்தி:** வணக்கம் சகோதரியே!

**யெப்தா மகள்:** வணக்கம்.

**பத்தி:** உங்களைப் பற்றிய விவரங்களைக் கூறுங்களேன்.

**யெ.ம:** என் தகப்பன் பெயர் யெப்தா. நான் என் தகப்பனுக்கு ஒரே பிள்ளை, எனக்கு சகோதரனோ, சகோதரியோ கிடையாது. எனக்கு தம்புரு வாசிப்பதிலும் நடனம் செய்வதிலும் மிகுந்த நாட்டம் உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருக்கு பயப்படும் பயம் என்னிடத்தில் உண்டு.

**பத்தி:** உங்கள் தகப்பன் பெயராலே நீங்கள் அறியப்பட்டிருப்பதால் உங்கள் தகப்பனைப் பற்றி சற்று விரிவாக கூறுங்களேன்.

**யெ.ம:** என் தகப்பனாகிய யெப்தா பலத்த பராக்கிரமசாலி, இஸ்ரவேலின் பத்தாவது நியாயாதிபதியாக இருந்தவர். யுத்த வீரன், தேவபக்தி உடையவர், என் தகப்பனின் தந்தை பெயர் கீலேயாத். என் தகப்பன் தனது அரை உடன்பிறப்புகளால் (Half Siblings) புறக்கணிக்கப்பட்டு துரத்தப்பட்டிருந்தார். அதினால் நாங்கள் தோப் தேசத்திலே வசித்து வந்தோம். ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருப்பவர். தன் காரியத்தையெல்லாம் கர்த்தருடைய சந்நிதியில் சொல்லும் வழக்கத்தை உடையவர். முந்நூறு வருஷத்து இஸ்ரவேலரின் வரலாற்றை நன்றாக அறிந்து வைத்திருந்தவர்.

**பத்தி:** உங்கள் தகப்பன் செய்த பொருத்தனை என்ன? எதனால் அவ்வாறு செய்தார்?

**யெ.மா:** கீலேயாத்தின் மூப்பர் என் தகப்பனாகிய யெப்தாவிடம் வந்து, தங்களுடனே கூட வந்து அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ணி கீலேயாத்தின் குடிகளாகிய தங்கள் மேல் தலைவனாயிருக்க கேட்டுக் கொண்டார்கள். என் தகப்பன் அம்மோன் புத்திரரோடு உடனே போரிட செல்லாமல் பலமுறை தூதுவர்களை அனுப்பி, யுத்தத்தினால் உண்டாகும் உயிர் சேதத்தையும், பொருள் சேதத்தையும் எடுத்துக் கூறி போரைத் தவிர்க்க முயற்சி செய்தார். ஆனால் அம்மோன் புத்திரரின் ராஜாவோ அதற்கு செவிகொடுக்கவில்லை. பின்னர் கர்த்தருக்கு பொருத்தனை ஒன்று செய்தார். அதன்படி அதாவது தேவன் அம்மோன் புத்திரரை தன் கையில் ஒப்புக் கொடுத்தால், அவர் (யெப்தா) சமாதானத்தோடு வீட்டிற்கு திரும்பும் போது, வாசற்படியிலிருந்து முதலில் எதிர்கொண்டு வருவதை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்துவார் என்பதே அந்த பொருத்தனை.

**பத்தி:** பொருத்தனையைப் பற்றி அறிந்தவுடன் நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?

**யெ.மா:** நான் என் தகப்பனின் வெற்றிச் செய்தியை அறிந்தவுடன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். என் தோழிகள் மற்றும் எங்கள் வீட்டின் பணியாளர்கள் அனைவருடன் சேர்ந்து என் தந்தையை வரவேற்கும்படி தம்புரு வாசித்து நடனமாடிக் கொண்டு வந்தேன். என் மகிழ்ச்சியைக் கண்டு என் தந்தை மிகவும் மகிழ்ச்சியடைவார் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் என்னைக் கண்டவுடன், தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு ''நீ ஏன் வந்தாய்?'' என்று என் தந்தை அலறியது என் உள்ளத்தைக் கலங்கப் பண்ணியது. பின்னர் என் தந்தை தான் செய்த பொருத்தனையைக் குறித்து எனக்கு விவரித்தார். முதலில் அதிர்ச்சியாகவும், பயமாகவும் இருந்தது. ''ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷன்; பொருத்தனை செய்த பின் யோசிப்பது மனுஷனுக்கு கண்ணியாயிருக்கும்'' போன்ற வார்த்தைகள் என்னை சிந்திக்க வைத்தன. என் தந்தை பொருத்தனை பண்ணியது ஒரு சாதாரண மனிதரிடம் அல்ல, வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்வலோகத்தின் அதிபதியாகிய கர்த்தரிடம் என்பதால், அதை கண்டிப்பாக செயல்படுத்தியே ஆக வேண்டும். எனவே நான் என் தந்தையிடம், அவர் செய்த பொருத்தனையைக் குறித்து கவலைப்பட வேண்டாம் என்றும், அதை மனமார நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

**பத்தி:** அப்படியானால் அந்த பொருத்தனை உடனே அன்றே நிறைவேற்றப்பட்டதா? உங்களுக்கு கடைசி ஆசை என்று எதுவும் இருக்கவில்லையா?

**யெ.மா:** இருந்தது, இப்படி ஒரு காரியத்தை சற்றும் எதிர்பாராத நான் என் தகப்பனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். 'நானும் என் தோழிமார்களும் மலைகளின் மேல் சென்று என் கன்னித்தன்மையை நினைத்து துக்கங்கொண்டாட இரண்டு மாத கால அவகாசம் கொடுக்க வேண்டும்' என்று கேட்டேன். அவரும் என்னை 'போய் வா' என்று அனுப்பினார். இரண்டு மாதங்கள் முடிந்து நான் என் தகப்பனிடத்திற்கு வந்து அவர் தன் பொருத்தனையை நிறைவேற்றும்படி கூறினேன்.



**பத்தி:** சபாஷ், அருமையான மகள்! உங்களைப் போன்று ஒரு பிள்ளை கிடைக்க உங்கள் தகப்பன் கொடுத்து வைத்திருக்க வேண்டும். வேதாகமத்தில் ஒரு முறை எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொரு வசனத்திற்கும் நாம் அப்படியே கீழ்ப்படியவே தேவன் விரும்புகிறார். அப்படியிருக்கும் போது, 'உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக' என்ற வசனம் (யாத். 20:12; உபா. 5:16; மத். 15:4; மத். 19:19; மாற்கு 7:10, 10:19; லூக்கா 18:20; எபே. 6:3) எட்டு முறை எழுதப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இந்த கற்பனையின் முக்கியத்துவத்தையும், எவ்வளவு தீவிரமாய் நாம் இதனை கைக்கொள்ள வேண்டும் என்ற தேவனின் விருப்பத்தையும் நம்மால் உணர முடிகிறது. அன்பு சகோதரி! உங்களுடனான இந்த உரையாடல் எங்கள் வாலிபப் பிள்ளைகளுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாக அமையும் என்று விசுவாசிக்கிறோம். நன்றி!

**யெ.மா:** நன்றி! வணக்கம்!

சிறப்புக் கட்டுரை: காலேப்



# ‘சந்திரயான் -3’

சமீப நாட்களில் ‘சந்திரயான்-3’ என்கிற பெயர் தான் இந்தியா முழுவதும் அனைத்து இந்தியர்களின் வாயிலிருந்தும் அதிகமாக வந்த வார்த்தை என்று சொன்னால் அது மிகையாகாது. ஜுலை மாதம் 14ம் தேதி, இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து நிலவிற்கு அனுப்பப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், சுமார் 1 மாத கால பயணத்திற்கு பின்பு, நிலவில் இதுவரை யாரும் கால் பதித்திராத தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கி சாதனை படைத்திருக்கிறது.

ஆனால் இந்த வெற்றி எளிதில் வந்து விடவில்லை, இதற்கு முன்பு இந்திய விஞ்ஞானிகளால் அனுப்பப்பட்ட சந்திரயான்-2 விண்கலம், நிலவில் மோதி வெடித்து பெரும் ஏமாற்றத்தையும், தோல்வியையும் ஏற்படுத்தியது. ஆனால் இந்த தோல்வியைக் கண்டு விஞ்ஞானிகள் துவண்டுபோகவில்லை. இதைக் குறித்து சந்திரயான்-2வின் திட்ட இயக்குநர் கே.சிவன் அவர்கள் பேசும் போது, சந்திரயான்-2 விழுந்து நொறுங்கிய அன்றைய தினமே, நாங்கள் எங்கள் தவறுகளை ஆராய்ந்து அறிந்து, சந்திரயான்-3க்கான வேலையைத் துவங்கி விட்டோம். ஏனென்றால், கடந்த தோல்விகளிலிருந்து நாங்கள் கற்றுக் கொண்ட பாடத்தை வைத்து, சந்திரயான்-3யை வடிவமைத்து, சில மாற்றங்களை செய்து அனுப்பினோம் என்று கூறினார். தற்போது இந்த ‘விக்ரம் லேண்டர்’ மற்றும் ‘பிரக்யான் ரோவர்’ நிலவில் அநேக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நிலவைக் குறித்த அநேக தகவல்களை நமக்கு தந்திருக்கிறது.

இன்றைக்கும் அநேக வாலிபர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் தோல்வி, ஜெப வாழ்வில் தோல்வி மற்றும் பரிசுத்தமாய் வாழ்வதில் தோல்வி என்று பல தோல்விகளை சந்தித்து இனி மேல் என்னால் தேவனுக்காக எழும்பி பிரகாசிக்க முடியாது என்கிற நிலைக்கு வந்துவிட்டார்கள். இன்றைக்கு நீங்களும் கூட இப்படிப்பட்ட பல தோல்விகளைச் சந்தித்து சோர்ந்து போய், இருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள்! சோர்ந்து போகாதிருங்கள்! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் தோல்விக்கான காரணத்தையும், செய்த தவறுகளையும் அறிந்து, ஆராய்ந்து அதை சரி செய்வீர்களானால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்கையில், ஜெப வாழ்கையில் மற்றும் பரிசுத்தத்தில் பெரிய வெற்றியை நிச்சயமாக காணலாம்.

14 நாட்கள் மட்டுமே செயல்படும் கால அளவை கொண்ட ‘விக்ரம் லேண்டருக்கும்’ ‘பிரக்யான் ரோவருக்கும்’ இத்தனை பெரிய எதிர்பார்ப்பும், உலகமே திரும்பி பார்க்கும் அளவிற்கு பெரிய திட்டங்களும், நோக்கங்களும் விஞ்ஞானிகள் அதற்கு வைத்திருந்தார்களானால், வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் அவரின் நாமம் மகிமைப்பட தெரிந்து கொள்ளப்பட்ட நமக்கு எத்தனை பெரிய திட்டங்களும், நோக்கங்களும் வைத்திருப்பார் என்பதை யோசித்து பாருங்கள்! ஆகையால் இப்போது உங்களுக்கு காணப்படுகிற தோல்வியை வாழ்கையின் முடிவாக எண்ணாமல், புதிய ஆரம்பத்திற்கான வாய்ப்பாக எண்ணி உங்களை அர்ப்பணிப்பீர்களானால் வரும் எழுப்புதலில் புதிய ஓட்டம் உங்களுக்காக காத்திருக்கிறது.

**“எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்;... தூசியை உதறிவிட்டு எழுந்திரு;...” (ஏசாயா 52:1,2)**

# MOUNT Sinai 2023

(வாலிபர்கள் ஒருநாள் உபவாசக் கூடுகை)

நாள்:
**நவம்பர் 11**
(சனிக்கிழமை)

நேரம் :
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

## திருச்சி மண்டலம்

### திருச்சியில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்,
22, சிவம் பில்டிங், கீழ சத்திரம் ரோடு,
தென்னூர் பஸ் ஸ்டாப் அருகில்



சகோ. ஹெயின் வெஸ்லி

தொடர்புக்கு:
9489775075

### தஞ்சாவூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்,
TPS நகர், பாலாஜி நகர் பஸ் ஸ்டாப்
மெடிக்கல் காலேஜ் ரோடு,



சகோ. ஜெயகாந்தன்

தொடர்புக்கு:
9489775075

### கரூரில்...
துதி மண்டபம்,
சி.எஸ்.ஐ. ஹென்றி லிட்டில் மெம்மோரியல் சர்ச்
இராமகிருஷ்ணபுரம்



சகோ. ஜெபஸ்டின் சாமுவேல்

தொடர்புக்கு:
9489775075

### பெரம்பலூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்,
71, MK காம்ப்ளெக்ஸ்,
வெங்கடேஷ்வபுரம்



சகோ. மைக்கேல்

தொடர்புக்கு:
9788812428

### புதுக்கோட்டையில்...
இயேசு கிறிஸ்துவின் பேழை சபை,
30, பாரதி நகர், திருமயம் ரோடு,
மலையேடு



சகோ. ஜெயசீலன்

தொடர்புக்கு:
9489775075

## சேலம் மண்டலம்

### சேலத்தில்...
சூசன் அம்மாள் ஹால்,
அப்சரா இறக்கம், கோட்டை



சகோ. குரூஸ் மாசிலாமணி

தொடர்புக்கு:
9962085523
9442131315
9791444788

### கிருஷ்ணகிரியில்...
விக்னேஷ் ஹால்,
3ஃ8-13 சேலம் புறவழிச் சாலை
(ராயக்கோட்டை மேம்பாலம் அருகில்)



சகோ. சதீஷ் குமார்

தொடர்புக்கு:
9962085523
9524999711
9791444788

### நாமக்கல்லில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்,
முருகன் கோயில் பஸ் ஸ்டாப்
16B, பொதிகை நகர் முதல் தெரு, சேலம் ரோடு



சகோ. காட்சன்

தொடர்புக்கு:
9962085523
830019710
9791444788

# செய்திகள்!


## கருவிகள் செயல்பட தொடங்கியது
# நிலவில் 8 மீட்டர் பயணித்த ரோவர்
### இஸ்ரோ தவகல்!

நிலவில் இறங்கிய ரோவர் 8 மீட்டர் பயணித்துள்ளதாகவும், ரோவரின் கருவிகள் செயல்பட தொடங்கியுள்ளதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆராய்வதற்காக கடந்த ஜூலை 14ம் தேதி எல்எம்வி 4 ராக்கெட் மூலம் சந்திரயான் 3 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டு புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. இதை தொடர்ந்து புவி வட்ட பாதை மற்றும் நிலவின் சுற்றுவட்ட பாதைகளில் சரியாக பயணித்து, முக்கிய கட்டமாக கடந்த (ஆகஸ்ட்) 17ம் தேதி உந்துவிசை கலனில் இருந்து லேண்டர் தனியாக பிரிந்து தனது பயணத்தை மேற்கொண்டு கடந்த (ஆகஸ்ட்) 23ம் தேதி மாலை 6 மணியளவில் சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. நிலவில் தரையிறக்கப்பட்ட லேண்டரில் உள்ள கருவிகள் பிரத்யேகமான சோதனைகளை தரையிறக்கப்பட்ட இடத்தில் மேற்கொள்ளும். இந்நிலையில் ரோவரை நிலவில் இறக்கி விட இரவு 10 மணியளவில் லேண்டரில் உள்ள 4 பக்கங்களில் ஒரு பக்கம் மட்டும் மெதுவாக திறந்து மிகுந்த கவனத்துடன் நிதானமாக நிலவில் சாய்வு தளம் ஏற்படுத்தப்பட்டது. லேண்டரில் இருந்த ரோவர் மிகவும் நிதானமாக சாய்வு தளத்தில் நிலவில் தரையில் இறக்கப்பட்டது. இதையடுத்து ரோவர் நிலவில் தனது பயணத்தை தொடங்கியது. நிலவில் இறங்கிய ரோவர் 8 மீட்டர் தூரம் பயணித்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

**இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட டிவிட்டர் பதிவு:**

ரோவரின் அனைத்து திட்டமிடப்பட்ட நகர்வுகளும் சரி பார்க்கப்பட்டது. ரோவர் வெற்றிகரமாக 8 மீட்டர் தூரம்



பயணித்துள்ளது. ரோவரில் உள்ள லிப்ஸ் மற்றும் ஏபிஎக்ஸ்எஸ் கருவிகள் செயல்பட தொடங்கியது. உந்துவிசை கலன், லேண்டர், ரோவரில் உள்ள அனைத்து கருவிகளும் சரியாக செயல்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் நிலவில் தரையிறக்கப்பட்டுள்ள விக்ரம் லேண்டரை நிலவின் சுற்றுவட்டப்பாதையில் இருக்கும் சந்திரயான் 2 விண்கலத்தின் ஆர்பிட்டர் படம் எடுத்துள்ளது. இதைத் தவிர லேண்டரில் இருந்து ரோவர் இறங்குவதற்காக லேண்டரின் கதவுகள் திறக்கப்பட்டது. மேலும் லேண்டரில் இருந்து ரோவர் நிலவில் தரையிறங்கிய வீடியோக்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. ரோவரில் செயல்பட தொடங்கிய 2 கருவிகள் நிலவின் வளிமண்டலம் மற்றும் நிலவின் தரைப்பரப்பில் இருக்கும் ரசாயன கலவை மற்றும் கனிமங்கள் கலவை குறித்தும், நிலவின் பரப்பில் உள்ள மண் மற்றும் கற்களில் உள்ள அலுமினியம், மெக்னீசியம், பொட்டாசியம், சிலிகான், இரும்பு ஆகியவற்றின் ரசாயன கூறுகள் கலவை மற்றும் அளவு குறித்து ஆய்வு செய்யும்.

**– தினகரன், 26 ஆகஸ்ட் 2023.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# பின்தொடர் ஊழியம்!

## கர்நாடகா, குஜராத்

நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற எழுப்புதலைப் பற்ற வைப்போர் முகாமில் கலந்து கொண்ட வாலிபர்களை உற்சாகப்படுத்த, கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கர்நாடகா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு சகோ. சாம் ஜெபராஜ் மற்றும் சகோ. அவினாஷ் அவர்கள் கடந்து சென்று, அந்த மாநிலங்களில், இந்த எழுப்புதலின் நாட்களில் எப்படி சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தனர். வந்திருந்த Igniters அனைவரையும் தேவன் ஆத்தும பாரத்தாலும், ஜெப பாரத்தாலும் நிரப்பி அனுப்பினார். கர்நாடகாவில் சுமார் 250 வாலிபர்களும், குஜராத்தில் சுமார் 260 வாலிபர்களும் இந்த பின்தொடர் கூடுகையில் (Follow up) கலந்து கொண்டு யுத்த அபிஷேகத்தையும், ஜெப அபிஷேகத்தையும், சுவிசேஷ அபிஷேகத்தையும், தீர்க்கதரிசன அபிஷேகத்தையும் பெற்றுக் கடந்து சென்றனர். இந்த எழுப்புதலின் நாட்களில் இன்னும் வைராக்கியமாக, துரிதமாக சுவிசேஷத்தை அறிவிக்க அநேகர் தங்களை ஒப்புக் கொடுத்தனர். தேவ ஊழியர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். கர்நாடகா மாநிலத்திலுள்ள அறங்காவலர் மற்றும் எழுப்புதலின் திட்டத்தில் இணைந்திருக்கும் ஊழியர்கள் இணைந்து இக்கூடுகையை மிகவும் நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தனர். குஜராத் மாநிலத்தில் Shalom Missionary ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் மற்றும் மிஷனெரிகள், இக்கூடுகையை மிகவும் அழகாக ஒழுங்கு செய்து நடத்தினார்கள். தேவனுக்கே மகிமை!












Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 09 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# MOUNT Sinai 2023

(வாலிபர்கள் ஒருநாள் உபவாசக் கூடுகை)

நாள்:
**நவம்பர் 11**
(சனிக்கிழமை)

நேரம் :
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

## சென்னை மண்டலம்

### சென்னையில்...

BKN ஹால், ரித்தர்டன் ரோடு
வேப்பேரி



சகோ.
வெஸ்லி
மேக்ஸ்வெல்

தொடர்புக்கு:
9488475315
044-28412300

### திருவள்ளூரில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
HSR Towers, 2வது மாடி,
CSI கௌடி நினைவாலயம் அருகில்



பாஸ்டர்
சரவணன்

தொடர்புக்கு:
7010586464
9444972737
9488475315

### காஞ்சிபுரத்தில்...

மெக்லீன் பாரீஷ் ஹால்,
CSI கிறிஸ்துநாதர் ஆலயம்,
101, இரயில்வே ரோடு
அரசு மருத்துவமனை எதிரில்



பாஸ்டர்
லூக்காஸ்
சேகர்

தொடர்புக்கு:
8903635315
9488475315

### வேலூரில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
அஜந்தா மஹால், காம்ப்ளக்ஸ் வெஸ்ட் கிராஸ் ரோடு
காந்திநகர், விருதம்பட்டு பெட்ரோல் நிலையம் எதிரில்



சகோ.
ரஞ்சித்
ஜெபா

தொடர்புக்கு:
9442979556
9442885315

### பேர்ணாம்பட்டில்...

எழுப்புதல் ஜெப கூடாரம்,
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு
வி.கே. ரோடு



சகோ.
தினகரன்

தொடர்புக்கு:
9940854125
9597927799

### இராணிப்பேட்டில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
M.B.D. ரோடு, நாவல்பூர்



சகோ.
இராபர்ட்
ராஜன்

தொடர்புக்கு:
9976766322
7373374733